பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 23 வியாழக்கிழமை 06.04.2023 கதிர்147

## இராணுவ பஸ் மோதி இளம் யுவதி இறப்பு

### காதலன் கண் முன்னால் துயரம்

வீதியில்நிறுத்திவைக்கப் பட்டிருந்தமோட்டார்சைக்கிள் மீது இராணுவத்தினர்சென்ற பஸ்ஒன்றுமோதிவிபத்துக்குள்ளானதில் குறித்த மோட்டார் சைக்கிளுக்கு அருகில் நின்றிருந்த 22 வயது யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நிட்டம்புவ பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டான பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது யுவதி, கொழும்பு - கண்டி வீதியின் கஜுபுர என்ற பகுதியில் நின்றிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது

உயிரிழந்த யுவதி தனது காதலனுடன் சுற்றுலா பயணம்சென்றுவிட்டுவீடுதிரும்பிக்கொண்டிருந்தபோதுஇந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய பயங்கரவாத சட்டமூலத்துக்கு எதிராக

## பெரும் போராட்டத்துக்கு விமல் பகிரங்க அழைப்பு



'அரசின் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்துக்கு எதிராக மாபெரும் கண்டனப் போராட்டத்தை கட்சி பேதமின்றி நாம் அனைவரும் ஒற்றுமையுடன் முன்னெடுக்க வேண்டும்.'

இவ்வாறு உத்தர லங்கா கூட்டணியின் தலைவரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தில் தஞ்சமடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசு, 'இப்போது அரசு வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து விலகுவதே எமது முதல்கட்டளை' எனக் கூறி நாட்டின் அனைத்து பொருளாதார ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த போதிய நிதி கையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டாலும், அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்தத் தேர்தலை நடத்தஏன்மறுக்கிறார்என்பதுஎல்லோருக்கும் தெரியும். தேர்தலில் தோற்றுவிடுவோம் என்கிற பயம்தான் அதற்குக் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அந்தத் தோல்விஎந்தளவுபெரிதாகஇருக்கும்என்பது எமக்கெல்லாம் தெரியாவிட்டாலும் உளவு மற்றும் புலனாய்வு அமைப்புக்கள் மூலம் அரசுத் தலைவருக்ககு நன்கு தெரியும்.

இப்போது அந்தத் தோல்வி எந்தளவு தூரம் பெரிதாகவும் மோசமாகவும் இருக்கும் என்பதும் தேர்தல் ஒன்று நடந்தால் யார் வெற்றிபெறுவார்கள் என்பதும் வெளிப்படக்கூடிய உதாரணம் அனுராதபுரத்தில் நடந்துள்ளது. மதவாச்சியவில் உள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கான தேர்தல் அண்மையில் நடந்தது. அதில் ஐக்கிய ☞2

## போதை மாத்திரை: கான்ஸ்டபிள் கைது

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறைபொலிஸ்பயிற்சிக்கல்லூரியின் கான்ஸ்டபிளே போதை மாத்திரைகளுடன் களுத்துறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரியும் கான்ஸ்டபிளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிடைத்த தகவலையடுத்து குற்றப் புலனாய் வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 56 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.களுத்துறை ☞2

## ஹரக் கட்டாவின் மனைவியையும் கைதுசெய்ய நடவடிக்கை

மடகஸ்கரில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள்



கடத்தல்காரருமான 'ஹரக் கட்டா' என்றழைக்கப்படும் நடுன் சிந்தக விக்கிரமரத்னவின் மனைவியை சர்வதேச பொலிஸாரின் ஊடாகக் கைது செய்து இலங்கைக்குஅழைத்துவரத் தேவையானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்தமாதம்15ஆம்திகதி ஹரக் கட்டாவுடன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும்போதைப்பொருள் ☞2

# புதிய பயங்கரவாதச் சட்டம் வந்தால் அனைவருமே பயங்கரவாதிகள் ஆவர்

### பேராசிரியர் ஜயதேவ உயங்கொட எச்சரிக்கை

**புதிய பயங்கரவாதச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் நாட்டின் அனைத்துக் குடிமக்களும் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படும்நிலைமையே உருவாகும் என்று பேராசிரியர் ஜயதேவ உயன்கொட தெரிவித்துள்ளார்.**

**வரிக்கொள்கைக்கு எதிராகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள பல்கலைக் கழகவிரிவுரையாளர்கள்சம்மேளம்ஏற்பாடு செய்திருந்த மெய்நிகர் கலந்துரையாடலொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**வீழ்ச்சி அடைந்துள்ள பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள நிபந்தனைகள் என்ன என்பது தொடர்பில் வெளிப்படையான தன்மை இல்லை.**

**இவ்வாறான நிலையில் நாட்டின் சுமையை, சாதாரண பொதுமக்களே சுமக்க வேண்டும் என்றே இந்த ஆட்சி எதிர்பார்க்கின்றது. குறிப்பாக, அன்றாட வருமானம் பெறுபவர்கள், நலிவுற்ற சமூகத்தினர் உள்ளிட்ட விளிம்புநிலையில் உள்ளவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்குவது தான் ஆட்சியாளர்களின் திட்டமாக உள்ளது. இது பெரும் சமூகப் பிரச்சினைக்கு அடித்தளமாகிவிடும்.**

**சமூகப் பிரச்சினைகள் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று ஆட்சியாளர்கள் அறிந்திருக்கின்ற போதும் அது தொடர்பில் அவர்கள் கரிசனை கொள்வது கிடையாது. தமது அரசியல்நலன்களிலேயே** ☞2

## பஸ் கட்டணங்கள் மேலும் குறையும்

எதிர்வரும் ஜூலை மாதம் மீண்டும் பஸ் பயணக் கட்டணத்தைத் திருத்தம் செய்ய முடியும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிசமான அளவு குறையும் பட்சத்தில் ஜூலை மாதம் பஸ் பயணக் கட்டணத்தைக் குறைக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம், உதிரிப்பாகங்களின் விலையைக் குறைக்கும் பட்சத்தில், அதன் பலனைப் பயணிகளுக்கு வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (02)

## ஆட்சிக்கு எதிரான மக்களாணையை தடுக்கவே புதிய பயங்கரவாதச் சட்டம்

### குற்றஞ்சாட்டுகிறார் வசந்த முதலிகே

இந்த ஆட்சிக்கு எதிரான மக்கள் ஆணையைத் தடுப்பதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்தமுதலிகேதெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

புதியபயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போ ☞2

## அனலைதீவை சேர்ந்த மூவர் தமிழ்நாட்டில் நேற்றுக் கைது

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்ட கண்ணாடி நாரிழைப் படகு ஒன்றில் கோட்டைபட்டினம் ஊடாகத் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவிய மூவர் புதன்கிழமை மாலை விழுப்புரத்தில் வைத்து தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த பிளாஸ்ரிக் படகு ஒன்று கோட்டைப்பட்டினம் ☞2

## புத்தாண்டுக் காலத்தில் மக்களே மிக அவதானம்

### பொலிஸார் அறிவுறுத்து

அடுத்த வாரத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாடப்படவுள்ள நிலையில், பொது மக்கள் புத்தாண்டுக்கான ஆயத்தங்களைமேற்கொள்ளதயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், மோசடி நடவடிக்கைகளில் மக்கள் சிக்கிக் கொள்வதைத் தடுப்பதற்கும் பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் பொலிஸாரினால் கீழ் வரும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

பொருட்களை கொள்வனவு செய்கையில் அவை நுகர்வுக்கு பொருத்தமானவையாஎன்றும்அவற்றின் விலைகள் குறித்து மக்கள் அவதானமாகஇருக்குமாறும், அதிக விலைகளில் சிக்க வேண்டாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனையாளர்கள்மற்றும்நுகர்வோர்கள் மூலம் போலி ரூபாய் தாள்கள் புழக்கத்தில் ☞2

## பொருளாதார வளர்ச்சி இந்தாண்டு 4.3 சதவீதத்தால் வீழ்ச்சியடையும்

### உலக வங்கி எச்சரிக்கை

(தன்வீன்)

இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.3 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் என்று தெரிவித்துள்ள உலக வங்கி, இது பெரும் சவாலை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடகளின் மறுசீரமைப்பு அவசியம்என்றுஉலகவங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் உலக வங்கி தனது அறிக்கையில் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அத்துடன், வலுவான மற்றும்நம்பகத்தன்மையுடன் கூடிய கட்டமைப்புடனான கடன் மறுசீரமைப்புத் திட்டமே நாட்டின் நீண்டகால நெருக்கடிகளுக்கு முற்றுப் புள்ளிவைக்கஉதவும்என்றும் உலகவங்கிகுறிப்பிட்டுள்ளது.

விசேடமாக ☞2

## புதிய பயங்கரவாதச் சட்டம் நீதிக் கட்டமைப்புக்கு சவால்

### ஆசிய மற்றும் பசுபிக் சட்டத்தரணிகள் சங்கம் கருத்து

உத்தேசபயங்கரவாதத்துக்கு எதிர்ப்புச் சட்டமூலம் இலங்கையின் நீதித்துறை கட்டமைப்பை சவாலுக்கு உட்படுத்தும்அம்சங்களைக் கொண்டிருக்கின்றது என்று ஆசிய மற்றும் பிராந்திய பசுபிக்சட்டத்தரணிகள்சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கம் நேற்று விடுத்துள்ளசெய்திக்குறிப்பில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில்நீதிமன்ற உத்தரவுகளைப் ☞2

## ராஜபக்சக்களைப் பாதுகாக்க ரணில் அரியணை ஏறவில்லை

### எதிர்க் கட்சிகளுக்கு மஹிந்த சொல்கிறார் கதை



'ராஜபக்சக்களைப் பாதுகாக்க ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவில்லை. அவர் நாட்டை முன்னேற்றவே ஆட்சியைப் பொறுப்பேற்றார்.'

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் எதிர்க்கட்சியினர்முன்வைத்து வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்கும் போதே மஹிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கடமையைத் திறம்படச் செய்கின்றார். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். அதன் பெறுபேறாக சர்வதேசநாணயநிதியத்தின் முதல் தவணை நிதியை இலங்கை பெற்றுள்ளது.

ரணிலின் நல்லெண்ண செயற்பாடுகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழுமையான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கும்.

நாட்டுக்கு நன்மை செய்பவர்கள் மீது சிலர் கல்லெறிவார்கள். அதேபோல்தான் ரணிலும் விமர்சனங்களை எதிர்கொள்கின்றார். ராஜபக்சக்களும் கடந்த காலங்களில் இப்படியானவிமர்சனங்களை எதிர்கொண்டார்கள்-என்றார். (02) ☞2

## தடைகளைத் தகர்த்தெறிந்து 13 ஐ அமுலாக்குவார் ரணில்

### அடித்துக் கூறுகின்றது ஐ.தே.க.

'வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையாக அமுல்படுத்தியே தீருவார்.'

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்ரீதியில்தனக்குப் பின்னடைவு ஏற்படும் என்றபோதிலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில்ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார்.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில்இருப்பவர்தான்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதனால்சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாடுகளும் மாறி வருகின்றன.

தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.



இது அத்தியாவசிய காரணி எனஜனாதிபதி கருதுகின்றார் - என்றார். (02)

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 70 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். மறு தரப்பில் பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த வெறும் 34 உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலும் மதவாச்சி நகரில் உள்ள அனைத்துத் தொகுதிகளையும் அப்படியே வழித்துத் துடைத்து வென்றிருக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி.

தேர்தல் ஒன்று நடந்தால் அதிலும் இதுபோன்ற பிரதிபலிப்பு அல்லது முடிவு வெளிப்படும் என்கிற அச்சமே உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்குக் காரணம். அதிலும் தனது கட்சியிலிருந்து பிரிந்து சென்று, ஐக்கிய தேசியக் கட்சியையே செல்லாக்காசாக்கிய தரப்பான ஐக்கிய மக்கள் சக்தியிடம், தேர்தலில் தான் தோற்று, அதுவும் மிக மோசமாகத் தோற்று அதிகாரத்தை இழப்பதிலும் பார்க்க, எந்தக் குறுக்கு வழியிலாவது ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டால், நாட்டின் நலனுக்காக அதைச் செய்ததாகக் கூறிதப்பிவிடலாம் என்கிற ஆசையே தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கான முக்கிய காரணம்.

............

கடந்த வாரம் புதிய பொலிஸ்மா அதிபர் தொடர்பில் தொடர்ச்சியாகச் செய்திகள் அடிபட்டுக்கொண்டிருந்தன. பதவியில் இருக்கும் பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலம் முடிவடைவதை அடுத்து புதிய பொலிஸ் மா அதிபராக யாரைக் கொண்டுவருவது என்பது தொடர்பில் எதிர்பார்ப்புக்கள் இருந்தன. அமைச்சர் ரிரான் அலஸ், தற்போதைய பிரதிப் பொலிஸ் மா அதிபர்களில் ஒருவரான தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக்குவதில் அக்கறையாக இருக்கிறார். இது தொடர்பில் ரிரானின் பத்திரிகைகள் ஏற்கனவே ஒரு கதையைச் சோடித்து விட்டிருந்தன. அடுத்த பொலிஸ் மா அதிபராக தேசபந்துவை நியமிக்க ஜனாதிபதி முடிவு செய்துவிட்டார் என்று அவை கிளப்பிவிட்டன. ஆனால் அது அப்படியல்ல என்று பின்னர் அரசுத் தலைவர் பக்கத்திலிருந்து தெளிவுபடுத்தப்பட்டது.

அதற்குப் பின்னர் மார்ச் 24 ஜனாதிபதி அமைச்சர் ரிரான் அலஸையும் தேசபந்துவையும் அழைத்துப் பேசினார். அதைத் தொடர்ந்து வெளியான செய்திகளிலும் தற்போதைய பொலிஸ் மா அதிபருக்கு மூன்று மாதங்களுக்கு பதவி நீடிப்பு வழங்குவதாக ஜனாதிபதி முடிவெடுத்திருக்கிறார் என்றும் அதே நேரம் தேசபந்துவுக்கு அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளார் என்றும் அந்தச் செய்திகள் கூறின. அவர்கள் இருவரையும் ஜனாதிபதி நேரில் சந்தித்த காரணத்தால் அது உண்மையாக இருக்கும் என்று அனைவரும் நம்பினர். ஆனால், அங்கு நடந்ததோ வேறு.

இருவரையும் அழைத்த ஜனாதிபதி தற்போதைய பொலிஸ் மா அதிபரின் பதவியை நீடிப்பதில் ஏதாவது ஆட்சேபனை இருக்கிறதாக என்று இருவரிடமும் கேட்டுக்கொண்டதுடன் அந்த விடயத்தை முடித்துவிட்டார். வேறு எதுவும் பேசவில்லை. ஆனால், தேசபந்துவை பொலிஸ் மா அதிபராக்க ஜனாதிபதி இணங்கிவிட்டார் என்று மீண்டும் கதையைப் பரப்பிவிட்டன ஊடகங்கள்.

**இடிமின்னல்**

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாகக் கவனம் செலுத்துகின்றார்கள். அதனாலேயே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதனால், பெரும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஏற்படலாம். இது அமைதியான சூழலுக்கு பெரும் பாதகத்தினை ஏற்படுத்தும். இதனால் சதாரண மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படப் போகின்றனர்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அமுலாகும் பட்சத்தில் தமது உரிமைகளுக்காக போராடுகின்ற சதாரண மக்களே பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்படுவார்கள் இல்லை அடக்கு முறைக்குள்ளாக்கப்படுவார்கள் - என்றார்.

## பெரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களை யும் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

அதற்கு எதிரான பொதுச் செயற்பாடுகளை நசுக்கப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்த அரசு முற்படுகின்றது.

இலங்கையில் உள்ள தொழிற்சங்கங்கள், தேசிய அமைப்புகள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து பொது நடவடிக்கைகளும் இந்தப் பாரபட்சமான நடவடிக்கைக்கு எதிராக ஒற்றுமையுடன் போராட வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்கள், தேசிய அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு நாம் ஒன்றைக் கூறுகின்றோம், இஸ்ரேல் ஜனாதிபதி கொண்டுவந்த அடக்குமுறை சட்டத்துக்கு எதிராக அந்நாட்டு மக்கள் எழுந்து நின்றது போல், இந்தத் தீய நடவடிக்கைக்கு எதிராக நாம் அனைவரும் எழுந்து நிற்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் நல்லிணக்கத்துடனும் ஒற்றுமையுடனும் மாபெரும் கண்டனப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும் - என்றார். (02)

## ஹரக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தல்காரருமான பாணந்துறை 'குடுசலிந்து' என அழைக்கப்படும் சலிந்து மல்ஷித இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.

இரண்டு குற்றவாளிகளும் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டு நீண்ட விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

விசாரணையின் போது ஹரக் கட்டா வழங்கிய தகவலின்படி, அவரது மனைவி சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக மிக விரைவில் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளார். (02)

## போதை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அனலைதீவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல்கரையில் தமிழ்நாடு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. 5929 இலக்கம் இந்தப் படகு செவ்வாய்க்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டது.

இப்படகில் பயணித்தவர்கள் யார், அவர்கள் எங்கே சென்றார்கள் என்கிற விவரங்கள் என்பவையும் தெரியவரவில்லை. பொலிசார் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

சட்டவிரோத நடவடிக்'கையில் ஈடுபடுபவர்களே படகு மூலம் ஊடுருவியிருக்க முடியும் என தமிழகப் பொலிசார் கருதிய நிலையில், அவர்களைத் தேடி வலைவிரித்த பொலிஸார், படகில் பயணித்தவர்கள் என்று கூறப்படும் மூவரை விழுப்புரம் அருகே கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் யாழ்ப்பாணம் அனலைதீவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் தமிழ்நாடு விழுப்புரம் முகாமில் இருந்து யாழ்ப்பாணம் வந்தே ஏனைய இருவரையும் அழைத்துச் சென்றுள்ளார் என்று தமிழ்நாடு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஆட்சிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள வாறு அமுலாக்கப்பட்டால் வாட்ஸ்அப் ஊடாக நேரலைப் பதிவைச் செய்ய முடியாது, முகநூலில் கருத்தை வெளியிட முடியாது. பின்னூட்டம் செய்ய முடியாது. துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட முடியாது. ஒன்று கூட முடியாது. போராட்டமொன்றில் பதாகையை ஏந்த முடியாது.

அதுமட்டுமன்றி, தொழிற்சங்க நடவடிக்கைகளான பணிப்பறக்கணிப்பு, கவனவீர்ப்பு போராட்டங்கள் என்று அனைத்துமே பயங்கரவாதச் செயற்பாடுகளாகவே கருதப்படும்.

தற்போது ரணில் விக்கிரமசிங்கவும், அவருடைய ஆட்சியும் சிறந்தது என்ற தோற்றப்பாடு கட்டியெழுப்பப்படுகின்றது. ஆனால் தனது ஜனாதிபதி பதவியைப் பாதுகாப்பதற்காக தேர்தலை பிற்போட்டவர் தான் அவர் என்பதை மறந்துவிட்டார்கள்.

அந்த வகையில் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் ஆணையை தடுத்து நிறுத்தும் வகையிலேயே இந்தச் சட்டமூலம் தற்போது கொண்டுவரப்படுகின்றது என்பது தெளிவாகின்றது - என்றார்.

## புத்தாண்டுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடப்படுவதால் அவதானமாக இருக்குமாறு மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பிக்பொக்கெட்காரர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும், அவ்வாறான பகுதிகளில் தங்களது சொந்த உடமைகளை பாதுகாப்பாக வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பொருள் கொள்வனவுகளுக்கான குழந்தையை அழைத்துச் சென்றால் தங்க நகைகளால் குழந்தைகளுக்கு அலங்காரம் செய்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடும் சிரேஷ்ட பிரஜைகள் சுகாதார காரணங்களுக்காக முககவசங்களை அணியுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொள்வனவு நடவடிக்கைகளுக்கு தங்கள் தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துபவர்கள், நியமிக்கப்பட்ட வாகன நிறுத்துமிடங்களில் வாகனங்கள் சரியாகப் பூட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் மக்கள் தங்களுடைய தலைக்கவசம் அல்லது உடமைகளை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களில் விட்டுச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொருட் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக வீட்டை விட்டு வெகுதூரம் செல்லும் பொதுமக்கள் இதுபோன்ற தகவல்களை சமூக வலைதளங்களில் பகிரவோ, விளம்பரப்படுத்தவோ வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுற்றுப்பயணங்களில் ஈடுபடும் மக்கள் காலநிலையை அவதானிக்குமாறும், பாதுகாப்பற்ற நீர்வீழ்ச்சிகளில் குளிப்பது போன்ற அபாயகரமான செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் அந்த அறிவுறுத்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (02)

## பொருளாதார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைத் தவிர்க்கவும், எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்ளவும் இந்த மறுசீரமைப்புத்திட்டம் மிகவும் முக்கியமானது என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

மேலும், தற்போதைய சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உரிய திட்டமிடல்கள் ஊடாக வலுவான மற்றும் திடமான பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் செயற்பாட்டை இலங்கை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

அத்தோடு, இலங்கைப் பொருளாதாரம் இந்த வருடத்தில் 4.3 சதவீதத்தினால் சுருங்குவதால் அது குறிப்பிடத்தக்க சவால்களை எதிர் கொள்ளும் என்று குறிப்பிட்டுள்ள உலகவங்கியானது, தற்போது சரியான பயணத்தை இலங்கை தொடங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஆசிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பித்த நீதிபதிகளை நாடாளுமன்றத்திற்கு விசாரணைக்கு அழைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தச் செயற்பாடு முற்றாக நிறுத்தப்பட வேண்டியதாகும்.

நீதித்துறையின் சுயாதீனத் தன்மையை முழுமையாக பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். நீதித்துறையின் சுயாதீனம் என்பது ஐ.நா.வின் கோட்டுபாடுகளில் ஒன்றாகக் காணப்படுவதுடன், அதனைப் பாதுகாக்க வேண்டியது ஆட்சியாளர்களின் தர்மீகக் கடமையாகும் - என்றுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






காலைக்கதிர்
Kalaikkathir

# பனை உற்பத்தி சார் வாழ்வாதார உதவித் திட்டம் ஓசூர் றோட்டறியினால் நாவற்குழியில் தொடக்கம்

இந்தியாவின், ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழகத்தின் "இலங்கைத் தமிழ் உறவுகளுக்கான வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின்" ஓர் அங்கமாக, யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தினால் முன்னெடுக்கப் படவுள்ள பனை உற்பத்தி சார் வாழ்வாதார உதவித் திட்டத்தின் தொடக்க நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.



றோட்டறி மாவட்டம் 2982 இன் முன்னாள் உதவி ஆளுநர் றொட்டேரியன் சரவணன் தலைமையில் நாவற்குழியில் அமைந்துள்ள நெய்தல் கடற்கரை நகரின் கருத்தரங்கு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நாவற்குழிப் பகுதியில் உள்ள கீழ் உழைப்புக் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 30 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் பனைசார் உற்பத்திகள் மற்றும் கைவினைப் பொருள்களின் உற்பத்தி தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. பயிற்சிக் காலத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைப் படியாக மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதுடன் உற்பத்திப் பொருள்களுக்கான மூலதன உதவியும் வழங்கப்படவுள்ளது.

அதுமட்டுமல்லாமல் பயிற்சியின் பின்னர் பயனாளிகளால் உற் பத்தி செய்யப்படும் பொருட்கள் முழுமையாக கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதி அனுசரணை ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் முதல் அணி பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர் தொடரந்தும் பயனாளிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அறிமுக நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தலைமைத் தூதரக அதிகாரியும், பிரதித் துணைத் தூதுவருமான ராம் மகேஷும் விருந்தினர்களாக கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்சி நிறுவனத்தின் முகாமையாளர் பி. விஜியேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், இந்தியாவின் றோட்டறி மாவட்டம் 2982 இன் உதவி ஆளுநர் றொட்டேறியன் பி. தக்ஷாயினி, ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழகத்தின் தலைவர் றொட்டேறியன் ரி. வி. முருகன் மற்றும் செயற்றிட்ட அனுசரணையாளர்களான ஓசூர் சிப்ஹொட் றோட்டறிக் கழக உறுப்பினர்கள், அவர்களது குடும்பத்தினர், யாழ்பாணம் றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் பங்குனி உத்தர திருவிழா

த. தர்மேந்திரா

காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் பங்குனி உத்தர திருவிழா புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் அடங்கலாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஏராளமான அடியார்கள் தரிசனம் மேற்கொண்டனர்.

சர்வமத பீடத்தின் ஸ்தாபகரும், தலைவருமான ஜீவாகரன் சுவாமியின் தலைமையில் பூசைகள், பிரார்த்தனைகள், யாகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சர்வமத பீடத்துக்கு எழுந்தருளிய சிவலிங்க பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.



அடியார்கள் கடலில் இருந்து தண்ணீர் எடுத்து வந்து சிவலிங்கபெருமானுக்கு நீரபிசேகம் மேற்கொண்டனர். இவர்களை ஜீவாகரன் சுவாமி ஆசிர்வதித்தார்.

மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது.





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்சித் தரப்பு எடுக்கவேண்டிய நடவடிக்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான விவகாரத்தில் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவின் முன்பாக அழைப்பதற்கான ஆட்சியாளர்களின் முயற்சியைத் தொடர்ந்து ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்குக் குறித்தொதுக்கப்பட்ட திகதிகளில் அது நடைபெறவில்லை. காலவரையறை இன்றி அது பிற்போடப்பட்டது. சித்திரை 25 அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்கெடுப்பையாவது குறித்த தினத்தில் நடத்துவதானால் சித்திரை 10 அல்லது அதற்கு முன்னர் தேவையான நிதி அரச அச்சகத்திற்கு விடுவிக்கப்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. ஆனால் இன்று சித்திரை 6 வரையில் அது தொடர்பான எந்தவொரு பதிலும் நிதி அமைச்சிடமிருந்து கிடைக்கவில்லை. வார இறுதி நாட்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது குறித்த நாளுக்குள் நிதி விடுவிப்பும் சாத்தியமில்லை. அதனால், உள்ளூராட்சி சபைத் தேர்தலை மீண்டும் ஒத்திப் போடுவதை அல்லது கைவிடுவதைத் தவிர தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வேறு வழியில்லை.

இப்படித் தேர்தல் நிறுத்தப்பட்டாலும், எதிர்க்கட்சிகள் முன்னர் முழக்கமிட்டதைப் போன்று தேர்தலை நடத்துவதற்காக வீதிகளில் இறங்கிப் போராடவில்லை. இன்னும் சொல்லப்போனால் முதல் தடவை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டபோது இருந்த எதிர்ப்பு குரல்கூட இரண்டாவது தடவையாகவும் தேர்தல் ஒத்திவைக்கப்படுகின்ற நிலை வந்திருக்கின்றபோது இல்லை.

தேர்தலை நடத்துவதற்கான நிதியை திறைசேரி தடுக்காமல் விடுவிக்கவேண்டும் என்று உத்தரவிட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் முன்பாக அழைக்க ஆட்சீயாளர்கள் எடுத்த அரசியல் நகர்வுகள் காரணமாக தமது எதிர்ப்பை எதிர்க்கட்சிகள் கணிசமாகக் குறைத்துக்கொண்டனவோ தெரியவில்லை. ஆனால், மறுபுறத்தில் நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவிற்கு அழைப்பது தொடர்பான அரசுத் தலைவர் ரணிலின் முடிவுக்கு அந்தக் குழுவிற்குள்ளேயே ஒருமித்த முடிவு இல்லை என்கிற செய்திகளும் வருகின்றன.

நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவில் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, அலி சப்ரி ஆகியோரும் உள்ளனர். அவர்கள் நீண்டகாலம் சட்டத்தரணிகளாகப் பணியாற்றியவர்கள். நீதித்துறையின் சுயாதீனத்தின் அவசியத்தை உணர்ந்தவர்கள். அது தவிர சிறப்புரிமைக் குழுவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும்கூடச் சட்டத்தரணிகள். அவர்களும் இந்த விடயத்தில் அரசுத் தலைவரின் நகர்வுக்கு ஆதரவாக இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் சிறப்புரிமைக் குழு இந்த விடயத்தில் இரண்டாகப் பிளவுண்டுள்ளது. எனவே கூடிய விரைவில் இந்த விடயத்தில் அந்தக் குழு ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழல் இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கிடையே உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஆவணி மாதம் தான் நடத்துவார் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் [ஐஎம்எவ்] உறுதியளித்திருக்கிறார் என்றும் செய்திகள் வருகின்றன. இவற்றின் பின்னணியில் பார்க்கின்றபோது உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறைந்தபட்சம் இன்னும் 4 மாதங்களுக்கு நடைபெறாது என்பது திண்ணம். இத்தகையதொரு நிலையில் நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மையைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் தொங்கிக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவின் நடவடிக்கைகளை ஆட்சித் தரப்பு முற்றிலுமாகக் கைவிடுவதாக அறிவிக்கவேண்டும்.

நீதித்துறை சுயாதீனம், ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் போன்றன பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் கடனுதவிக்கான நிபந்தனைகளிலும் கட்டாயம் உள்ளடங்கியிருக்கக்கூடிய நிலையில் சிறப்புரிமைக் குழுவின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டு நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதே இப்போதைக்கு முக்கியம்.

# கடன்களை எப்படி நிலைப்படுத்துவது? இதுவே நம் முன்னுள்ள முக்கிய சவால்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(தன்வீன்)

இலங்கை அரசு மீளச் செலுத்த வேண்டியுள்ள கடனை எவ்வாறு நிலைப்படுத்துவது என்பதே எம்முன் உள்ள முக்கியமான சவால் என்று தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஏப்ரல் மாதத்தில் உள்நாட்டு வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் அறிவிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சி.சிங்களசேவைக்கு வழங்கிய தனிப்பட்ட நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த நேர்காணலில் அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை திருப்பிச்செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டியது, சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு விதித்துள்ள இலக்குகளில் ஒன்று.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை இலங்கை அதிகாரிகள் இந்தவருடம் ஏப்ரல் மாதத்தில் அறிவிக்கவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

நாட்டின் செலவுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேசிய வருமானம் போதாமையின் காரணமாக, கடந்த காலங்களில் தொடர்ச்சியாக வெளிநாடுகளிடம் இருந்து வெவ்வேறு வடிவங்களில் கடன்கள் பெறப்பட்டிருக்கின்றன. திறைசேரியின் பத்திரங்கள், முறிகள், மத்திய வங்கி முற்பணம் உள்ளிட்ட பல்வேறு கடன்வசதிகள் ஊடாக கடன்கள் பெறப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளுக்கு அமைய, நாட்டின் மொத்த உள்நாட்டு கடனின் அளவு 13 ஆயிரத்து 189 பில்லியன் ரூபாவாகும். இதில் 4 ஆயிரத்து 126 பில்லியன் ரூபா கடன் திறைசேரி பத்திரங்கள் ஊடாகப் பெறப்பட்டுள்ளதோடு, மேலும் 8,722 பில்லியன் ரூபா திறைசேரி முறிகள் ஊடாகப் பெறப்பட்டுள்ளது.

4126 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி பத்திரங்களில் 62.4 சதவீதத்தை மத்திய வங்கியே கொள்வனவு செய்துள்ளதோடு, திறைசேரி முறிகள் தொடர்பில் தன்னார்வ அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஏற்கனவே அரசு திறைசேரி முறிகள் ஊடாக பெற்றுக்கொண்டுள்ள 8722 பில்லியன் ரூபா கடனில் 44.5 சதவீதமானது வைப்பீடுகளை பொறுப்பேற்கும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

கேள்வி:- நீங்கள் ஒருவருடத்திற்கு முன்னாதாக நாட்டின் பொருளாதாரம் சம்பந்தமாக கருத்து வெளியிடுகின்றபோது, இலங்கையின் பொருளாதாரம் பள்ளத்தை நோக்கிச் செல்லும் வாகனத்தைப் போன்றுள்ளது என்றும் ஏதேனும் ஒரு வகையில் அதனைத் தடுக்காது விட்டால் நிலைமைகள் மோசமாகிவிடும் என்றும் கூறினீர்கள். தற்போது அந்த வாகனத்தின் நிலைமை எவ்வாறுள்ளது?

பதில்:- எதிர்காலத்தில் இதே நிலைமையில் ஒரே திசைநோக்கிச் செல்லாது விட்டால் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அந்தப் பயணத்தின் போது சவால்கள் ஏற்படலாம்.

கேள்வி:- என்னவிதமான சவால்கள் ஏற்படலாம்?

பதில்:- மீளச்செலுத்த வேண்டியுள்ள கடனை எவ்வாறு ஸ்திரப்படுத்துவது என்பதே முலாவது சவாலாகும்.

கேள்வி:- சர்வதேச கடன் வழங்குநர்களின் கடன்களை மறுசீரமைப்பதற்குச் சமாந்தரமாக உள்நாட்டு கடன்களையும் மறுசீரமைக்க வேண்டுமல்லவா?

பதில்:- இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மத்தியவங்கி கொள்வனவு செய்துள்ள திறைசேரி பத்திரங்களை மையப்படுத்தியே நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. தனியார் உள்ளிட்ட ஏனைய தரப்பினர் கொள்வனவு செய்துள்ள திறைசேரி பத்திரங்கள், முறிகள் தொடர்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது.

திறைசேரியின் முறிகள் தன்னார்வு அடிப்படையிலேயே நீக்கப்படவுள்ளன. ஒருமுறிக்குபதிலாக பிறிதொரு முறியை வழங்குவதற்கு முன்வருபவர்கள் பங்கேற்கும் வகையில் அந்த முறி நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

வங்கிக் கட்டமைப்பின் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கையை பின்பற்றுவதாக சர்வதேச நாணய நிதியத்திடம் எடுத்துரைத்துள்ளோம்.

# ராஜபக்சக்கள் குற்றமற்றவர்கள்

## - நிரூபமணமாகியுள்ளன என்கிறார் நாமல்



ராஜபக்சக்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் போலியானவை என நிரூபமணமாகியுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

'களவு, கொள்ளையென்றெல்லாம் ராஜபக்சக்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ராஜபக்சக்களுக்கு வெளிநாடுகளில் சொத்துகள், கணக்குகள் உள்ளன என்றும் கூறப்பட்டது. ஆனால், அவை போலியானவை என்பது உறுதியாகியுள்ளது.

நல்லாட்சியின் போது விசாரணை நடத்தப்பட்டது, எனினும், வெளிநாட்டில் கணக்கு இருப்பு இருப்பது கண்டறியப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அதேபோல் ராஜபக்சக்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. அவர்கள் விடுதலையாகினர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறினார். நல்லாட்சியின்போது இவர்களே ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகித்தனர்.

எனவே, நாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி.

ஊழல் எதிர்ப்புச் சட்ட மூலம் அவசியம். அது நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டால் முழு ஆதரவு வழங்கப்படும். அத்துடன், போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற சரத்தும் அந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வசமே பலமான அரசியல் கட்டமைப்பு—பொறிமுறை உள்ளது. அதனால் தான் கட்சி மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.' - என்றார். (02)

# தொழிற்சங்கக் கோரிக்கைகள் குறித்து பேச ஜனாதிபதி வாய்ப்பளிக்க வேண்டும்

## மைத்திரிபால சிறிசேன கோரிக்கை



கட்டாயவிடுமுறைவழங்கப்பட்டுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சேவையாளர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் பேச்சில் ஈடுபட ஜனாதிபதி வாய்ப்பு வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

கடந்த ஏப்ரல் மாதம் நாடு எவ்வாறான நிலையை எதிர்கொண்டது என்பதை அனைவரும் நன்கு அறிவோம். லிற்றோ நிறுவனம் அதிக வருமானம் பெற்ற நிறுவனமாக இருந்தது. அந்த நிறுவனம் தனக்கு பொருத்தமில்லாத வேலைகளை செய்யப்போய் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. எரிவாயு கலவையில் மாற்றம் ஏற்படுத்த போய் லிற்றோ நிறுவனம் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டது.

இதேவேளை பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற் சங்க பிரதிநிதிகள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டவர்களில் அதிகமானவர்கள் சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள். இவர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். சில கட்சிகளை சேர்ந்த தலைமைத்துவம் வழங்கியவர்கள் அதில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். மனிதாபிமான ரீதியில் பார்த்து அவர்கள் பணிக்கு செல்ல அனுமதி வழங்குமாறு கோருகின்றோம்.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விடயத்தில் பிரச்சினைகள் உள்ளன. அண்மையில் முட்டை இறக்குமதி செய்யப்பட்டது. வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உணவுக்காக முட்டை வழங்குவதற்கு முடியாதுள்ள நிலையில் அவற்றை கேக் உற்பத்திக்காக பேக்கரிக்கு விநியோகிக்கின்றனர். இதனை மாற்றி முட்டை வழங்கப்பட வேண்டியவர்களுக்கு அதனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

# நேரடி அரசியலில் இறங்கியமையால் விசமத்தனமான அபத்த குற்றச்சாட்டு

## வித்தியாதரன் விசனம்; நிரூபிக்குமாறும் அவர் சவால்

தான் நேரடி அரசியலில் இறங்கியமையால், சில முகம் தெரியாத தரப்பினரும் பிரகிருதிகளும் தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொண்டு, அபத்தக் குற்றச்சாட்டுகளையும் விஷமத்தனமான - கேவலமான - புனைகதைப் பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றனர் என்று மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் விசனம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், குற்றச்சாட்டுகளை சுமத்துவோர் வெறும் அடையாளம் வெளிப்படுத்தாத பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'சுத்து மாத்து' காரணங்களை கூறாமல், ஆதாரங்களையும் சான்றுகளையும் முன் வைத்துத் தமது குற்றச்சாட்டுகளுக்கான அடிப்படைகளையாவது நிரூபிப்பார்களா என்று பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

அத்தோடு குற்றச் சாட்டுகளை சுமத்துவோர் தங்களை பகிரங்கப்படுத்தாமல் ஒளித்திருந்து செயல்படுவது அவர்களது பேடித்தனத்தை காட்டுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நீண்ட சுமார் 40 ஆண்டுகள் ஊடகப் பட்டறிவு கொண்ட நான் அரசியலில் நேரடியாக இறங்கியமையை அடுத்து என் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் துர்நோக்கில், வெளியில் தம்மை அடையாளப்படுத்தாத சில அநாமதேய சமூக ஊடகத் தரப்புகளும், ஓர் அச்சு ஊடகங்கமும் வேண்டுமென்றே திட்டமிட்டுப் பொய்த் தகவல்களையும், ஆதாரமேயற்ற புனைகதைகளையும் பெரும் எடுப்பில் பரப்பி வருகின்றன என்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றேன். என் பொது வாழ்வில் இத்தகைய அபத்தக் குற்றச்சாட்டுகள் புதியவை.

யாழ்.இந்து கல்லூரி மாணவர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றார் என்று வெளியான தகவலையொட்டி நடைபெற்ற பொலிஸ் விசாரணையைத் திரித்து, என் மீது பாலியல் குற்ற அவதூறு பிரச்சாரம் செய்வதற்கு இந்தத் தரப்புக்கள் அதனை விஷமத்தனமாகப் பயன்படுத்துகின்றன. சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றதாகக் கூறப்படும் இந்த சம்பவத்திற்கும், எனக்கோ அல்லது நான் இதுவரை காலம் பணியாற்றிய காலைக்கதிர் பத்திரிகைக்கோ அல்லது அதன் ஊழியர்கள் எவருக்குமோ தொடர்பு ஏதும் இல்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன். எனினும் இவ்விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் யாழ் பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான குற்ற விசாரணைப் பிரிவினர் பிரதான சந்தேகநபர் ஒருவரை அடையாளம் கண்டுள்ளனர் என நான் அறிகிறேன். அவர் தொடர்பான சிசிடிவி கமரா பதிவுகளையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அந்தப் பிரதான சந்தேக நபர் எச்சமயத்திலும் கைதாகக் கூடும்.

கல்லூரி மாணவனுக்கும் கல்லூரியுடன் சம்பந்தப்படாத வெளியாள் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவத்தை கல்லூரியை இலக்கு வைத்து பாலியல் வலை அமைப்பு இயங்குவதாகக் குறிப்பிட்டு, கல்லூரிக்கும் நிர்வாகத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் கேவல சதி நடவடிக்கையும் ஊடகத்தின் பெயரால் தொடர்ந்து அரங்கேறுவது துரதிஷ்டமாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதால் என்னையோ, எனது முன்னைய பத்திரிகையின் தற்போதைய நிர்வாகத்தையோ, பத்திரிகையின் முன்னாள், இந்நாள் ஊழியர்கள் எவரையுமே பொலிஸார் விசாரணைக்கு கூட அழைக்கவில்லை என்பதை பகிரங்கப்படுத்துவதோடு, இந்தவிடயம் குறித்து தங்கள் அடையாளத்தையோ பொறுப்பு கூறலையோ வெளிப்படுத்தாமல் இவ்வாறு ஊடக அதர்மத்தை பிரதிபலிக்கும் இந்தப் பிரகிருதிகளை தங்கள் செய்திக்கான ஆதாரத்தை வெளிப்படுத்தி உண்மைத் தன்மையை நிரூபிக்கும் படியும் பகிரங்க சவால் விடுக்கிறேன்.

பெயர்விவரம் குறிப்பிடாத பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இத்தகைய அவதூறு ஏற்படுத்தும் செய்திக்கு வலுச்சேர்க்கும் பத்திரிகை அதர்மமும் யாழ்ப்பாணத்தில்தான் சர்வசாதாரணமாக தொடர்கின்றது. தங்கள் செய்தி திட்டமிட்டு பரப்பப்படும் விஷமத்தனமான வதந்தி என்பதை நன்கு அறிந்திருந்தும், 'பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன' என அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் வதந்திகளை அந்த ஊடகம் வெளியிடுவதும், அதை பொலிஸ் தரப்பு பார்த்திருப்பதும், இத்தகைய அதர்ம, அவதூறு, பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு பொலிஸ் தரப்பும் கூட பின்னணியும் காரணமுமா என்ற நியாயமான சந்தேகமும் எழுகின்றது.

என் பெயரை இந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி செய்தி வெளியிட்ட சில தரப்புகளை அடையாளம் கண்டுள்ளேன். அவற்றுக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவிருக்கிறேன்.

உள்ளூர்ப் பத்திரிகை ஒன்று என் பெயர் குறிப்பிடாமல், நான் பணியாற்றிய பத்திரிகையின் பெயரையும் நேரடியாகக் குறிப்பிடாமல் அதை இழுத்துத் தனது வழமையான கிசுகிசுப் பாணி செய்தியாக இந்த விடயத்தைத் தன் முன் பக்கத்தில் மிகப் பெரிய ஐந்து கொலம் புதினமாக வெளியிட்டு, தனது வக்கிரத்தை காட்டியுள்ளது. இத்தகைய அத்துமீறலலை - அக்கிரமத்தை - சுயநல அரசியலுக்காக அனுமதித்து, ஊக்குவித்து நிற்கும் அதன் நிர்வாகியும் கண்டிக்கப்பட வேண்டியவர் மட்டுமல்ல, தண்டிக்கப்படவும் வேண்டியவர்.

சட்டம் தன் பணியை செய்யும், தர்மம் நிலை நிறுத்தப்படும், காலம் உண்மைகளை வெளிப்படுத்தும் என்று நம்புகிறேன்.

- என்று உள்ளது.

# பயறு மற்றும் சிவப்பு சீனியை இறக்குமதிசெய்ய கோரிக்கை



இறக்குமதி தடையை நீக்கி பயறு மற்றும் சிவப்பு சீனியை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பொருள்களின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு சுங்க வரி விதிக்க வேண்டும் அல்லது உரிய அனுமதி வழங்க வேண்டும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

ரூபாவின் வலுவால் பொருள்களின் விலைகள் 10 வீதம் முதல் 12 வீதம் வரை குறைந்துள்ளதாகவும் நிஹால் செனவிரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சித்திரைப் புத்தாண்டை நாட்டு மக்கள் மிகவும் சந்தோசமாக கொண்டாடலாம்

## நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு



நாட்டு மக்கள் தமிழ் - சிங்கள புத்தாண்டை இம்முறை சந்தோசமாக கொண்டாடலாம். காலி முகத்திடலில் கொண்டாட வேண்டிய தேவையில்லை.

அத்தியாவசிய பொருளகளின் விலை குறைப்பு தொடர்பில் ஒன்றிணைந்த கண்காணிப்பு நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்போம் என வர்த்தக துறை மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது டொலர் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இறக்குமதி செய்யப்படும் 1464 அத்தியாவசியமற்ற பொருள்கள் மீது மட்டுப்பாடு விதிக்கப்பட்டன.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த கடுமையான தீர்மானங்களால் நாடு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. ஆகவே இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான மட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும்.

இதற்கமைய நாட்டு மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கடந்த செப்ரெம்பர் மாதம் 708 பொருள்கள், நவம்பர் மாதம் 62 பொருள்கள் மற்றும் டிசெம்பர் மாதம் 09 பொருள்கள் மீதான இறக்குமதி மட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

வெகுவிரைவில் 689 பொருள்கள் மீதான மட்டுப்பாடுகள் தளர்த்தப்படும். பொருளாதார மேம்பாட்டின் பலனை நாட்டு மக்களுக்குப் பெற்றுக்கொடுப்போம்.

2022 ஆம் ஆண்டு தமிழ்- சிங்கள புத்தாண்டை மக்கள் காலி முகத்திடல் போராட்டக்களத்தில் கொண்டாடினார்கள். நாட்டின் அவலநிலையை மக்கள் மாறுபட்ட விதத்தில் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டினார்கள், ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது.

எரிபொருள் ,எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவடைந்துள்ளது, ஆகவே நாட்டு மக்கள் இம்முறை தமிழ்- சிங்கள புத்தாண்டை சந்தோசமாகக் கொண்டாடலாம். மின் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. ஏதாவதொரு வழிமுறையில் மின்கட்டணம் திருத்தம் செய்யப்படும்.

பணவீக்கம் மற்றும் உணவு பணவீக்கம் கட்டம் கட்டமாகக் குறைவடைந்து செல்கிறது. பணவீக்கம் அதிகம் உள்ள நாடுகள் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது, ஆகவே பணவீக்கம் மற்றும் உணவு பணவீக்கம் வெகுவிரைவில் ஒற்றை இலக்கத்துக்கு ஸ்தீரப்படுத்தப்படும். - என்றார்.

இதன்போது எழுந்து குறுக்கிட்டு கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான், அத்தியாவசிய பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளமை மகிழ்வுக்குரியது. ஆனால் விலை குறைப்பு சந்தையில் சாத்தியமற்றதாக உள்ளது.

வியாபாரிகள் பழைய விலைக்குத் தான் பொருள்களை விற்கிறார்கள், ஆகவே பொருள்கள் விலை தொடர்பில் வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். - என்றார்.

இதற்கு பதலளித்த வர்த்தகத்துறை அமைச்சர் மூலப் பொருள்களின் உயர்வடையும்போது அத்தியாவசிய பொருள்களின் விலையை வர்த்தகர்கள் அதிகரிக்கிறார்கள், ஆனால் விலை குறையும்போது விலை குறைப்பை அமுல்படுத்துவதில்லை, இது காலம் காலமாக காணப்படும் பிரச்சினைதான்.

பண்டிகை காலத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலை தொடர்பில் ஆராய நுகர்வோர் அதிகார சபை மற்றும் உணவு பாதுகாப்பு திணைக்களத்துடன் ஒன்றிணைந்து விசேட செயற்திட்டத்தை அமுல்படுத்துவோம். - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# சைவ சமயத்துக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக நடத்தப்படும் அநீதிகளை தென்னிலங்கை அரசியல்வாதிகள் தடுக்கவேண்டும்

## நல்லை ஆதின முதல்வர் கோரிக்கை



சைவ சமயத்திற்கும் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அநீதிகளை தென்னிலங்கை அரசியல் வாதிகள் தடுத்து நிறுத்தவேண்டும் என நல்லை ஆதீன முதல்வர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யாது விடின் அவர்களின் வடக்கு விஜயத்தின் போது சைவத்தலைவர்கள் சந்திப்புக்களை தவிப்பார்கள். மேலும் இந்தியா ஆதி சமயமான சைவத்தையும், சைவ ஆலயங்களையும்பாதுகாக்க முன்வரவேண்டும் என வைவ சமய அமைப்புக்கள் தீர்மானம் எடுத்துள்ளன எனவும் அறிவித்துள்ளார்கள் எனத் தெரிவித்து நல்லை ஆதின முதல்வர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு-

சைவ சமயம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்மகர்த்தா சபையினர், ஆதீன கர்த்தாக்கள். கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், ஆதீன முதல்வரின் தலைமையில் நடைபெற்றகூட்டத்தில்எடுக்கப்பட்ட தீர்மானங்களாக இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 ஆம் ஆண்டுதொடக்கம்இலங்கைதமிழ் மக்களுக்கு எதிராக இனரீதியான, மதரீதியானகலாசாரரீதியானஒடுக்கு முறைகள், தமிழ் பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் தென்னிலங்கை அரசின் ஆதரவுடன்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதுதொடர்பாகத்தமிழ்மக்கள், தமிழ்மக்களின்பிரதிநிதிகள்தமிழ்த் தலைமைகள் பல தடவைகள் இதற்கெதிராகக்குரல்எழுப்பிவந்தும் இதற்கான தீர்வுகள் இலங்கை அரசிடமிருந்து கிடைக்கவில்லை.

தமிழ்மக்களின்நீண்டகாலக் கோரிக்கைகளுக்குப் பின் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை உருவாக்கப்பட்டது.

இந்தியஇலங்கைஒப்பந்தத்தின் அடிப்படையில்இணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களின் பூர்வீக தாயகம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

அத்துடன் கொடுக்கப்பட்ட அதிகாரங்களும் இலங்கை அரசால் மீளப்பெறப்பட்டுள்ளன. இது தமிழ் மக்களை அடிமையாக்கும் முயற்சியாகவே நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம்மற்றும்ஆயுதப்போராட்டம் நிறைவடைந்த பின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர் தாயகப்பகுதிகளில் தமிழர் அல்லாதோரை மிக வேகமாகக் குடியேற்றுவதும், தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்கள், கோவில்களை அழிப்பதும், தொல்பொருட் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசித் திணைக்களம் போன்றவற்றினூடாகத் தமிழ் பகுதிகளில் உள்ளநிலங்களை ஆக்கிரமிப்பதும் மிகவேகமாகநடைபெறும்அன்றாட நிகழ்வுகளாக நாம் கருதுகிறோம்.

மேலே குறிப்பிட்டசம்பவங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்குத் தமிழர்தரப்பால்பலதரப்பட்டமுறைப்பாடுகள்செய்தும், நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுத்தும் எந்த வித பயனையும் நாம் அடைய முடியவில்லை.

இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பாக நீதி வழங்கும் முறைமையில் தமிழ் மக்களுக்கு பாரிய சந்தேகம் நிலவுகின்றது. ஒரேநாடு ஒரேசட்டம்என்றகொள்கை பின்பற்றப்படுவதில்லை என்பதைத் தமிழ் மக்கள் உணர்கிறார்கள்.

இலங்கையில் மதமாற்ற தடைச்சட்டம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

சமீபத்தில் கிறீஸ்தவ போதகராகிய சக்திவேல், ஆணையிறவில் நடராசர் வடிவ சிலை வைக்கப்பட்டதைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கை விட்டதுடன் சிவபூமியாக வடக்கு கிழக்கை சிலர் ஆக்க முயற்சி செய்கிறார்கள் என எள்ளி நகையாடியமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கைக்குரிய ஒரு சைவத் தமிழ் பெயர் சிவபூமி. அவரது கூற்றை சபையினர் முழுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தியா ஆதிச் சமயமாகிய சைவசமயத்தையும் சைவாலயங்களையும் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தென்னிலங்கையில் இருந்து வரும் அரசியல் தலைவர்கள் மேற்குறித்த பிரச்சினைகளுக்கு பதில்தராவிடில் அவர்கள் வடக்கே வரும் போது அவர்களின் சந்திப்புக்களை சைவசமயத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும். மேற்குறித்த தீர்மானங்கள் யாவும் ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டவை. - என்றுள்ளது.

# மின்சாரக் கட்டணங்களை 30 வீதத்தால் குறைக்கலாம்

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

உலகசந்தையில்எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளன. எனவே கடந்த பெப்ரவரியில் 60 சதவீதத்தால்அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும்.

எனவே மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனையை விரைவில் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளதாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின்சாரத்துக்கான கேள்வி 22 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அத்தோடு டொலரின் பெறுமதியும் குறைவடைந்துள்ளது. இதற்கு சமாந்தரமாக எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளும் குறைக்கப்பட்டுள்ளதோடு, உலக சந்தையில் எரிபொருள் மாத்திரமின்றி நிலக்கரியின் விலையும் பாரியளவில் குறைவடைந்துள்ளது. இந்த விலைக் குறைப்புக்களின் பிரதிபலன் விரைவில் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

கடந்த பெப்ரவரியில் 60 சதவீதத்தால் அதிகரித்த மின் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க முடியும். இது தொடர்பாக மார்ச் 30 ஆம் திகதி இலங்கை மின்சார சபைத் தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதங்களில் போதுமான மழைவீழ்ச்சி இல்லைஎனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், நீர் மின் உற்பத்திக்குத் தேவையான மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது.

உலகசந்தையில்எரிபொருள் மற்றும் நிலக்கரி என்பவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளதன் பயனை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதால், விரைவில் மின்கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனையை எமக்கு வழங்குமாறு கோருகின்றோம். பெப்ரவரியில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக 30, 60, 90 மின் அலகுகளை உபயோகிக்கின்ற 50 லட்சம் மக்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டனர்.

அடுத்தமின்கட்டணதிருத்தம் தொடர்பில்எதிர்வரும்ஜூலையில் முன்வைக்கப்படவுள்ளது. எனினும் அதற்கு முன்னர் மின் கட்டணங்கள்குறைக்கப்படவேண்டும். அவ்வாறு அதிகரிக்கப்படாவிட்டால் குறைந்த வருமானம் பெரும்மேற்கூறப்பட்ட 50 லட்சம் பேர் மேலும் பாதிக்கப்படுவர். பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீது மேலும் சுமைகளை சுமத்துவதாகவே அமையும். எனவே, விரைவில் மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் 250 டொலர்களாகக் காணப்பட்ட நிலக்கரியின் விலை தற்போது 150 டொலர்கள் வரை குறைவடைந்துள்ளது. அதே போன்று உலக சந்தையில் எரிபொருள் விலைகளை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்கும் போது டீசல் லீற்றரொன்றை250ரூபாவுக்குவழங்க முடியும். - என்றார்.

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை திறைசேரியால் பாதுகாக்க முடியாது!

## - நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

நாடு பொருளாதார நெருக்கடியில்இருக்கும்போது, பணத்தை இழக்கும் அல்லது இலக்குகளை எட்டாத நிறுவனங்களை இனி திறைசேரியால்பாதுகாக்கமுடியாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்சேமசிங்கதெரிவித்தார்.

திறைசேரியில்இருந்து பணம் ஒதுக்குவது என்பது இந்த நாட்டில் உள்ள பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்படும் பணத்தை அந்த நிறுவனங்களின் பராமரிப்புக்காக ஒதுக்குவது என்பதை அனைத்து தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக அரசு மக்களுக்கு சுமைகளைச் சுமத்தி நிறுவனங்களைத் தொடர்ந்தும் நடத்தாதுஒழுங்குபடுத்தும்அதிகார சபையாகச் செயற்படும் என்றும் நிதி அமைச்சில் நடைபெற்ற பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட இராஜாங்கஅமைச்சர்தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த52பொதுநிறுவனங்களில் 39இலாபகரமானவை. ஏனைய13 அரசு நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு நட்டத்தைச் செலுத்தும் 13 அரச நிறுவனங்களின் இழப்பு 1,029 பில்லியன் ரூபாவாகும்.

ஆனால், இலாபம் ஈட்டும் 39 நிறுவனங்களின் இலாபம் 218 பில்லியன் ரூபாவாகும்.

மொத்தத்தில் அரச நிறுவனங்களின் வருடாந்த இழப்பு 811 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும்.



இலாபம் ஈட்டும் நிறுவனங்களால்திறைசேரிக்கு28மில்லியன் ரூபாமட்டுமேசெலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக, உலகம் ஏற்றுக் கொண்ட பொருளாதார முறைகளை இலங்கை பின்பற்ற வேண்டியுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு அந்த நாடு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை இனங்காண்பது தனியே மேற்கொள்ளப்பட வேண்டும்.' - என்றார். (02)




# புற்றுநோய் உருவாக்கும் கூறுகள் சுண்ணாம்பில் இருப்பது கண்டறிவு

## ஜயவர்த்தனபுர பல்கலை ஆய்வு தெரிவிப்பு யாழ்ப்பாண மக்களுக்கு கடும் எச்சரிக்கை

ஸ்ரீஜெயவர்த்தனபுரபல்கலைக் கழக விஞ்ஞானிகளான சிரேஷ்ட பேராசிரியை சுரங்கி ஜெயவர்தன, சிரேஷ்ட பேராசிரியர் பிரதீப் ஜெயவீர, பேராசிரியர் மஞ்சுளா வீரசேகர, கலாநிதி சஜித் எதிர்சிங்க ஆகியோ ரின் வழிகாட்டலில் இறுதியாண்டு இளநிலை மாணவன் ஹசான் பிரியந்த நடத்திய ஆராய்ச்சியின் பின்னர் வெற்றிலையுடன் உட் கொள்ளப் படும் இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் புற்றுநோயை உருவாக்கக்கூடிய கூறுகள் இருக்கின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சியின் மூலம் இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் புற்றுநோயை உண்டாக்கும் டோடமைன் பி என்ற வேதியியல் கூறு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

வெற்றிலையுடன் உண்ணும் சுண்ணாம்புவகைகளின் மாதிரிகள் யாழ்ப்பாணத் தீவைச்சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரிக் கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. மேலும், யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் வெற்றிலைக்குப் பயன்படுத்தப்படும் இளஞ்சிவப்பு சுண்ணாம்பில் புற்றுநோயை ஏற் படுத்தும் கூறு அதிகளவு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சிக்காக 48 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன என ஆய்வுக்குழு கூறுகின்றது. 2019 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சால் முன்வைக்கப்பட்ட அறிக்கையின் படி அதிகளவிலான வாய்ப்புற்றுநோய் நோயாளிகள் மற்றும் அது தொடர்பான இறப்புகள் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோடமைன் பி என்ற கூறு, புற்றுநோய்க்குரிய முக்கிய காரணமாக இருக்கமுடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி நடத்திய ஆய்வு அறிக்கை சுகாதார அமைச்சு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உணவுக்கட்டுப்பாட்டு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து பெறப்பட்ட சுண்ணாம்பு மாதிரிகள் மேலதிக ஆய்வகப்பரிசோதனைக்காக

அரசாங்கத்தின் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு சுதேச பிரிவு ஏற்பாடு செய்தது.

அரசின் பகுப்பாய்வு திணைக்களம் நடத்திய ஆய்வில், சுண்ணாம்பு மாதிரிகளில் புற்றுநோயை உண்டாக்கும் 'ரோடமைன் பி' என்ற கூறு இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

பின்னர் இது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கும் ஆய்வுக்குழு அறிவித்தது. இந்தப்புற்றுநோய்க் காரணிகளைப்பற்றியாழ்ப்பாணப்பிரதேசம் மற்றும் ஏனையபிரதேசங்களுக்கு தெரியப்படுத்துவது அவசியமானதாகும்.

வெற்றிலையுடன் உட்கொள்ளப்படும் இளஞ்சிவப்பு சுண்ணாம்பை உடனடியாக சந்தைப் பயன்பாட்டிலிருந்து அதிகாரிகள் அகற்றுவது அவசியமானது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

# வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களம் கடும் இனவாத கொள்கையுடன் செயற்படுகின்றது

## கஜேந்திரன் எம்.பி. சபையில் காட்டம்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களம் சிங்கள மயமாக்கலுக்கு என அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த தொல்பொருள் திணைக் களத்தோடு முப்படைகளின் ஆதரவுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இருப்புக்கள் இல்லாதொழிக்கப்படுகின்றன என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், பௌத்த பிக்குகளுக்கு துப்பாக்கி ஏந்திய மெய்பாது காவலர்களை வழங்கியது யார் என்றும் இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

நாட்டில் புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் பொருளாதார முன்னேற்றத்துக்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு தமிழ் முஸ்லிம் சமூகத்தை முழுமையாகக் கருவறுக்கும் செயற்பாடுகள் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

தாம் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்றாலும் இனவாத தலைவர்களை தெரிவு செயவதை சிங்கள மக்கள் இனியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# வயோதிபர் சடலமாக மீட்பு

வீதியோரத்திலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு - மூன்று முறிப்புப் பகுதியிலுள்ள வயல்வெளி வீதியோரத்தில் இருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா - முள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த 71 வயதான நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கால்நடைகளைமேய்ப்பதற்காகச் சென்றவர்களால் குறித்த சடலம் அடையாளம் காணப்பட்ட நிலையில் நட்டாங்கண்டல் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நட்டாங்கண்டல் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (02)

# ஓமான் முதலீட்டாளரைத் தாக்கிய சூத்திரதாரிகளைக் கைதுசெய்வோம்

## திலும் அமுனுகம உத்தரவாதம்



கம்பஹா மாவட்டத்தில் ஓமான் முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிகவும் பயங்கரமானது. அதனால் இந்தசம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை விரைவில் கைதுசெய்து சட்டத்துக்கு முன் நிறுத்த நடவடிக்கை எடுப்பேன் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

கம்பஹா மாவட்டத்தில் நீண்டகாலமாக செயற்பட்டுவரும் ஓமான் நாட்டுக்குச் சொந்தமான ஆடைத் தொழிற்சாலை முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல் எமது நாட்டுக்கு பாரியபாதிப்பு. இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கையில் எமக்கு திருப்தியடைய முடியாது. அதனால் இந்தச் சம்பவம் தொடர்பான நடவடிக்கைகளைக் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு வழங்கி இருக்கிறோம்.

அத்துடன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஓமான் தூதரகமும் தங்களது வன்மையான கவலையைத் தெரிவித்திருக்கிறது. இது எமக்கு பாரியதொரு பாதிப்பாகும். அதனால் இந்தசம்பவத்துடன் தொடர்புபட்டவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்றவகையில் நான் தலையிடுவேன். ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பேன் என்ற உறுதியை இந்த சபைக்கு தெரிவிக்கிறேன். - என்றார்.

# இடிந்து வீழ்ந்து ஆபத்தான நிலையில் திருவையாறு வில்சன் வீதிப் பாலம்

கிளிநொச்சி திருவையாறு வில்சன் வீதியில் மூன்றாம் பகுதியில் உள்ள சரவனாஸ் பாலம் அதன் அத்திபாரம் இடிந்துவீழ்ந்த நிலையில் ஆபத்தானதாகக் காணப்படுகிறது.

இரணைமடு குளத்தின் இடது கரை பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் திருஷ்வாறு வில்சன் வீதியையும் மூன்றாம் பகுதியையும் இணைக்கும் பாலம் இடிந்து விழும் நிலையில் தற்போது காணப்படுகிறது.

விவசாய கிராமமான திருவையாறு பிரதேசத்திலிருந்து ஏனைய



பகுதிகளிக்கு உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் தினமும் தங்களுடைய நாளாந்த நடவடிக்கைகளுக்காக தற்போதும் குறித்த பாலத்தையே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் குறித்த பாலம் எவ்வேளையிலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.



குறித்த பாலம் இரணைமடு குள புனரமைப்பின் ஒரு பகுதியான இபாட் திட்டத்தின் கீழ் கடந்த சில வருடங்களுக்குமுன் புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்டது என்றும் ஆனால் புனரமைப்பின் போது மேலோட்டமாக பூசி மெழுகி புனரமைப்பு பணிகளை நிறைவு செய்துவிட்டனர் என்றும் பிரதேச பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த பாலத்தின் ஆபத்தின் விபரீதத்தைப் புரிந்து கொண்டு உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் அவசர கோரிக்கையை விடுத்துள்ளனர்.

# சுகாதார அமைச்சு வழங்கினால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார்

## ராஜித பகிரங்க அறிவிப்பு



எதிர்காலத்தில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டு தமக்கு சுகாதார அமைச்சுப்பதவி வழங்கினால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பண்டாரகமதனியார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எப்பொழுதும் அரசியல் சார்ந்து முடிவு எடுப்பதனால் தான் மக்கள் தம்மை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS









### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna

+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 22 புதன்கிழமை 05.04.2023 கதிர் 19

## தாத்தாவையும் பாட்டியையும் தாக்கிக் கொலைசெய்த பேரன்

80 வயதுடைய தாத்தாவையும் 70 வயதுடைய பாட்டியையும் பேரன் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் பல்லகெடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான தாத்தாவும் பாட்டியும் தெமோதர வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட போது 80 வயதுடைய தாத்தா தெமோதர வைத்திய சாலையில் உயிரிழந்துவிட்டார்.

70 வயதுடைய பாட்டி மேலதிக சிகிச்சைகளுக்காகப் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் அவரும் சிகிச்சை பலனின்றி 2

## மார்க்ஸிச லெனிஸக் கட்சியும்கூட பயங்கரவாத சட்டத்துக்கு எதிர்ப்பு



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஆக கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். தங்களுடைய உரிமைகளை கேட்ட ஒரே காரணத்துக்காக தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் போராடியதற்காக, பல இளைஞர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தமது வாழ்வினை இழந்துள்ளனர்.

பயங்கரவாத 2

## சமுர்த்தி வங்கி ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டம்

### நாடுமுழுவதும் நாளை நடக்கும் என்று அறிவிப்பு

சமுர்த்தி வங்கி ஊழியர்கள் நாளை நாடுமுழுவதும் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

கண்டியில் இன்று நடைபெற்ற சமுர்த்தி ஊழியர் சங்கத்தின் செய்தியாளர் சந்திப்பில் இந்தப் போராட்டத்துக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது. சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.ஏ.மஸ்தாக் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

எமக்கு வழங்கப்படுகின்ற 12 ஆயிரம் ரூபா மேலதிகக் கொடுப்பனவை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு ஆட்சியாளர்கள் இணங்கியுள்ளபோதும் இதுவரையில் அந்தக் கொடுப் பனவு வழங்கப்பட்டவில்லை.

ஆகவே, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வரி உள்ளிட்ட ஏனைய விடயங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று தீர்மானித்துள்ளோம்.

இந்தப்போராட்;டத்திற்கு அரசாங்கம் செவிசாய்க்காது விட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் – என்றார்.

## புதிய வகை போதைப் பொருளான

# கஜீஸ் 90 கிலோ இன்று சிக்கியது





### மன்னார் கடலில் இந்தியர்கள் மூவரும் கைது

(ந.லோகதயாளன்)

மன்னார்க் கடலில் 90 கிலோ கஸீஸ் போதைப் பொருளுடன் இந்திய நாட்டுப்படகு ஒன்று இன்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

தலை மன்னார் கடற்பரப்பில் நுழைந்த இந்திய படகைக் கைப்பற்றிய கடற்படையினர் அதனுள் சோதனை நடத்தியபோது 90 கிலோ கஸீஸ் போதைப் பொருளைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு கஸீஸ் போதைப் பொருளை ஏற்றி வந்த இந்தியப் படகில் பயணித்த 3 இந்தியர்களும் கடற்படையினரால் கைது செய்ப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஸீஸ் மற்றும் சந்தேக நபர்கள் மன்னார் கடற்படைத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

## புதிய சட்டம் மக்களின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலெனில் ஆதரிக்கமாட்டோம்

### மொட்டுக் கட்சி தெரிவிப்பு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மக்களின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் எனில் அதனை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரிக்காது.

இவ்வாறு ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:



மக்களின் பாதுகாப்பு, ஊடக பாதுகாப்பு மற்றும் சட்டம் – ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்று அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி இருக்கின்றது. அதற்கேற்ற வகையிலேயே புதிய சட்டம் அமைய என நம்புகின்றேன்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் உள்ளடக்கங்கள் எனக்குத் தெரியாது. அது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

ஜே.வி.பி. உட்பட பயங்கரவாதச் செயலில் ஈடுபட எத்தனிக்கும் நபர்களுக்கு இத்தகைய சட்டம் வலிக்கும். அத்தகையவர்களே போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் – என்றார்.

## அடுத்த வருட இறுதி வரை ஜனாதிபதி தேர்தல் இல்லை

இந்த வருடம் நவம்பர் மாதத்துடன் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட முடியும் என்று ஆளும் தரப்பைச் சேர்ந்த சில தலைவர்கள் கூறிவந்தாலும் அடுத்தவருட பிற்பகுதிவரை – அதாவது ரணில் விக்கிரமசிங்க அமர்ந்திருக்கும் கதிரையின் முழுப் பதவிக் காலமும் முடியும் வரை – ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் இல்லை என்று, இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரசமைப்பின் அடிப்படையில் தனது முதலாவது பதவிக்காலத்தின் நான்கு வருடங்கள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியால் புதிய மக்கள் 2

## ப்ரைட்ரைஸ், கொத்து விலைகள் 20 சதவீதத்தால் உடனடி குறைப்பு

சமைத்த உணவுப்பொதி, ப்ரைட்ரைஸ், கொத்துரொட்டி ஆகியவற்றின் விலைகளை 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் இதற்போது உணவுப் பொருட்களின் விலைகளை உடனடியாகவே குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அந்தவகையில் சமைத்த உணவுப்பொதி, கொத்து ரொட்டி, மற்றும் ப்ரைட்ரைஸ் ஆகியவற்றின் விலைகளை 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக இ 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சமைத்த உணவுப்பொதியொன்றின் விலை 60 ரூபாவினால் குறைவடையவுள்ளது. அதேநேரம் 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட கொத்துரொட்டி ஒன்று 100 ரூபாவினால் குறையவுள்ளது. இதே போன்று தேநீர் ஒன்றை 30 ரூபாவிற்கு வழங்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த விலை குறைப்பை உடனடியாக அனைவரும் ஏற்று நுகர்வோர் பயனடைவதற்கு இடமளிக்க வேண்டும் – என்றார்.

## அமைச்சுப் பதவிக் காய்ச்சல் உள்ளோர் ஆட்சியாளர்களின் பக்கம் தாவக்கூடும்

### இப்படித் தாக்குகிறார் ஹர்சன ராஜகருணா எம்.பி.

எதிர்க்கட்சியில் அமைச்சர் பதவிக் காய்ச்சல் உள்ளவர்கள் சிலர் இருக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியிலிருந்து தற்போது யாராவது ஆட்சியாளர்களுடன் இணைந்து கொள்வார்களாயின் அவர்கள்



நிச்சயமாகப் பணத்தைப் பெற்றே அங்கு செல்லவுள்ளனர் என்பது வெளிப்படையானது.

அதேபோன்று, எதிர்க் கட்சியில் சிலருக்கு அமைச்சர் பதவிக் காய்ச்சல் உள்ளது. அவர்களால் அமைச்சர் பதவியின்றி நீண்டகாலம் இருக்க முடியாது. ஆகவே அமைச்சர் பதவிக் காய்ச்சல்; உள்ளவர்கள் ஆட்சியாளர்களிடம் பதவிக்காகச் செல்லலாம் என்பது வெளிப்படையானது.

பணத்துக்காகவும் பதவிக்காவும் ஆட்சியின் பக்கம் செல்பவர்களின் அரசியல் எதிர்காலத்தை இருள்சூழ்ந்து விடும். அதன் பின்னர் அவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப்போவதில்லையென்பதை மனதில் கொள்ளவேண்டும் – என்றார்.

## பொலிஸ் சார்ஜன்ட், தந்தை, மனைவி கோர விபத்தில் பரிதாபமாக இறப்பு



கப் ரக வாகனமும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சாவடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாழபோ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் பயணித்த தனமல்வில பொலிஸ் நிலையத்தின் சார்ஜன்ட், 2

## சூரியன் உச்சியில்

இன்று முதல் ஏப்ரல் 15 வரை சூரியன் இலங்கையின் அட்சரேகைகளுக்கு மேல் நேரடியாக இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இன்று தல்பே, வலிப்பிட்டிய மற்றும் திஹகொட ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக நண்பகல் 12.13 அளவில் சூரியன் உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.




## ஏப்ரல் வீரர்கள் தினம் இன்று யாழ்ப்பாணத்தில்

ஜேவிபியின் ஏப்ரல் வீரர்கள் ஞாபகார்த்த தினம் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

இலங்கையில் 1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஜேவிபி போராட்டம் தொடங்கிய நிலையில் அதில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. 2

## தனிப்பட்ட கருத்துக்களுக்காகவும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பாயும்

### மக்கள் பேரவை எச்சரிக்கை

சமூக ஊடகங்களில் தனிப்பட்ட கருத்துக்களை பதிவு செய்தாலும் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் பாயும் என்று மக்கள் பேரவைக்கான இயக்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் அந்த இயக்கத்தின் பிரதிநிதி சட்டத்தரணி நுவன் போபகே இன்று செய்தியாளர்களைச் சந்தித்து இந்தச் செய்தியைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



உத்தேச புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், அதில் உள்ள 12, 13 ஆவது பிரிவுகளுக்கு அமைவா கச் சமூக ஊடகங்களில் தனிப் பட்ட கருத்துக் களை பதிவு செய்தால்கூட பயங்கரவாதியாக அடையாளப்படுத்தப்பட்டு கைது செய்யப்படும் நிலைமையே காணப்படுகின்றது.

தான் நியமிக்கின்ற பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், நீதிபதி உள்ளிட்டவர்களைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த நாட்டையும் நிறைவேற்று அதிகாரம் (ஜனாதிபதி) தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கே முயல்கின்றது – என்றார்.

## அரச நிறுவன மறுசீரமைப்பிற்கு துறைசார் நிபுணர் குழு நியமனம்

அரச நிறுவனங்களை மறுசீரமைக்க துறைசார் நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காகத் துறைசார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவானது, மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் ஒவ்வொரு நிறுவனங்களையும் ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன் சர்வதேவ நாணய நிதியத்துடனான உடன்பாட்டின் அடிப்படையில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது.

அந்த இணக்கப்பாட்டில், சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்டக் குழுவினருடன் இணங்கிய விடயங்களை உள்ளீர்த்தே மறுசீரமைப் பை மேற்கொள்ளவேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் நிதி அமைச்சின் துறைசார் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் குழு ஆகியவற்றின் பங்கேற்புடனேயே மறுசீரமைப்புக்கள் இடம் பெறவுள்ளமையால் அது அதியுச்சமான அளவில் வெளிப்படைத்தன்மை நிறைந்ததாக அமையவுள்ளது.

தற்போது நாம் படுகுழியில் இருந்து எழுந்து புதிய பயணமொன்றை மேற்கொள்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம்.

கடந்தத் கால தவறுகள் தொடர்பில் அனுபவங்கள் உள்ளன.

இதனால் மீண்டும் தவறுகள் இடம்பெறாது முன்னோக்கிப் பயணிப்பதற்கான நோக்கம் மட்டுமே அனைவரிடத்திலும் உள்ளது – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# சீனா, ஆஸ்திரேலியா, அமெரிக்க நிறுவனங்களுடன் 3 வாரங்களுக்குள் எரிபொருள் விநியோக ஒப்பந்தம்

## அமைச்சர் காஞ்சன தகவல்

நாட்டில் பெற்றோலிய இறக்குமதி , விநியோகம் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளை சீன, ஆஸ்திரேலிய மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் கையெழுத்திடப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதற்கமைய சீனாவின் சினொபெக், ஆஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம் , அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோக சந்தையில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அனுமதி வழங்க கடந்த மார்ச் 27 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இந்நிலையிலேயே குறித்த நிறுவனங்கள் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவுள்ளன என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எரிபொருள்விநியோகத்துக்கு3வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கல் தொடர்பில் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. குறித்த 3 நிறுவனங்களுக்கும் தலா 150 வீதம் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

எமக்கு உரிமம் உள்ள 234 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை தவிர்த்தே , மேற்கூறப்பட்ட நிறுவனங்களால் மேலதிக எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இவற்றில் எமக்கு உரித்து காணப்படாது. மாறாக, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களால் அவை நிர்வகிக்கப்படும்.

இந்நிறுவனங்களுக்கும் எரிபொருள் விலைசூத்திரம்பொருந்தும். விலைசூத்திரத்துக் கமைய அரசாங்கத்தால் எரிபொருள் விலை தீர்மானிக்கப்படும். ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் அவற்றால் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும். பெற்றோலிய கூட்டுத்தாபனமும் அதன் அடிப்படையில் தற்போதும் சுயாதீன நிறுவனமாகவே செயற்பட்டு வருகிறது. – என்றார்.

## மார்க்ஸிச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புச் சட்டம் இதைவிடப் பாரதூரமானது. இதனால் இன்னும் பலர் சிறைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படலாம். ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொள்ள முடியாது தொழிற்சங்க போராட்டம் மேற்கொள்ள முடியாது நியாயமான தீர்வு கோரி போராட்டம் செய்ய முடியாது. பொதுவாக ஆட்சியாளர்களைப் பொது மேடைகளில்கூட விமர்சிக்க முடியாது இந்த சட்டத்தின் கீழ்.

இவ்வாறு தெரிவித்தார் புதிய மார்க்சிச லெனின் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல்.

யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடக்கத்தில் இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலங்கள் 10 ,15 ,20 வருடங்கள், சிறையில் இருந்தவர்கள்கூட இருக்கின்றனர். அவர்களின் விடுதலைக்காக இந்த நாட்டில் உண்மையாக ஜனநாயகத்தை மதிக்கின்ற அனைத்து சக்திகளும் கடந்த காலத்தில் போராடி வந்திருக்கின்றோம்.

அந்தப் போராட்டத்தின் விளைவாகத்தான் படிப்படியாக காலத்துக்கு காலம், பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களும் வயதானவர்களும் விடுதலை செய்யப்பட்டு வந்து இன்னும் சிலர் தொடர்ந்து சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

இந்த அநியாயம் மோசமான நிலைமை மாறுவதற்கு முன்பே அதே பயங்கரவாத தடை சட்டத்தை போன்ற, இன்னும் அதைவிட ஒரு மோசமான சட்டத்தை ரணில் விக்கிரமசிங்க ஆட்சி கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முன் வந்திருக்கின்றமை மிகவும் கண்டிக்கத்தக்கது.

இதனை எதிர்த்து மக்கள் போராட வேண்டும். மக்கள் அந்த நிலைமைக்கு தற்பொழுது தள்ளப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிராக போர் கொடி தூக்கி உள்ளனர்.

வெளியில் தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்கி உள்ளன.

மாணவர் இயக்கங்கள் போர்க்கொடி தூக்கி உள்ளன.

எங்களைப் போன்ற இடதுசாரி கட்சிகளும் இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி உள்ளன.

இந்த சட்டம் நடைமுறைக்கு வருமாக இருந்தால் , ஏற்கனவே 44 வருடங்கள் நடைமுறையில் இருந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை விட இன்னும் மோசமான சட்டமாக இது வரும் என்ற அபாயத்தை நாங்கள் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்தச் சட்டம் இவர்கள் இதுவரை முன்மொழிக்கப்பட்ட இந்த சட்டத்தில் இருக்கின்ற விடயங்களை பார்க்கின்ற பொழுது , சாதாரணமாக கூட்டம் கூடினால்கூட, ஒரு கூட்டத்தில் ஆட்சியாளர்களை எதிர்த்துப் பேசினால்கூட , அது பயங்கரவாதமாகக் கருதப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்படும்.


இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வந்தால், தொழிற்சங்கங்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராட முடியாது. வேலை நிறுத்தங்களை செய்ய முடியாது. பகீஸ்கரிப்புகளை செய்ய முடியாது.

நியாயம் கேட்கின்ற தொழிற்சங்கங்களை, மாணவர்களை இந்தத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து அடைக்கக்கூடிய ஒரு அபாயகரமான சூழல் எதிர்காலத்தில் வரப்போகின்றது. எனவே தான் இந்த சட்டம் கொண்டுவரப்படக்கூடாது என்கிறோம்.

நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரக்கூடாது என்ற மக்கள் இயக்கம், குறிப்பாக நாடு முழுவதும் தென்னிலங்கையில் இருக்கக்கூடிய தொழிற்சங்கங்களும் இடதுசாரி அமைப்புகளும், முற்போக்கு சக்திகளும் , ஜனநாயக சக்திகளும் கையில் எடுத்திருக்கக் கூடிய சூழலை நாங்கள் பார்க்கின்றோம் மீ என்றார்.

## ஏப்ரல்...







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரம் உள்ளிட்ட அக்கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் இந்த அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டனர்

## தாத்தாவையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார். தாக்கிய சந்தேகநபரான பேரன் தலைமறைவாகியுள்ளார் என்று பல்லகெடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பல்லகெடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்கிய பேரன் போதைவஸ்து பழக்கத்துக்கு அடிமையானவர் என்று பல்லகெடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பல்லகெடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது தந்தை மற்றும் அவரது மனைவி ஆகியோரே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

மூவரின் சடலங்களும் வெல்லவாய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

கப் ரக வாகனத்தின் சாரதி உட்பட மூவர் வெல்லவாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அடுத்தவருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையை பெறுவதற்காக ஜனாதிபதி தேர்தலிற்கு அழைப்புவிடுக்க முடியும்.

இதன் காரணமாக ஜனாதி பதியின் நான்குவருட பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் இந்தவருட இறுதியில் ஜனாதிபதி தேர்தலிற்கான அழைப்பு விடுக்கப்பட லாம் என்ற ஊகங்கள் வெளி யாகியுள்ளன. முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச பதவி விலகிய பின்னர் அவரின் முடிவடை யாத பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கே தற்போதைய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவியை ஒருவர் இராஜினாமா செய்த பின்னர் அவரின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு ஜனாதிபதியாக பதவியேற்றவர் , இராஜினாமா செய்த ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்தேயாகவேண்டும். அவரால் இடைக்கால தேர்தலிற்கு செல்ல முடியாது என்பது எனது தனிப்பட்ட கருத்து எனவும் அவர் தெரிவித்தார்.

# இலவசங்களை உடன் பெற்றுவிட மட்டு. விவசாயிகளுக்கு அறிவுறுத்து

(பழுவூரான்)



மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கான இலவச உரம் மற்றும் இலவச டீசல் என்பவற்றை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராசா அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக விவசாய அமைச்சினால் இலங்கை பூராகவும் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக அடிக்கட்டு உரம் வழங்கப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக அடிக்கட்டுப்பசளை (TSP) மார்ச் 20ஆம் திகதி முதல் பெரும் போகத்திற்காக வழங்கப்பட்டு வருகின்றது.

அரசினால் வழங்கப்படும் குறித்த உரத்தினை இதுவரை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் 40% வரையே பெற்றுள்ளனர்.

ஏப்ரல் 10 உர விநியோகம் நிறுத்தப்படவுள்ளதனால், அதற்கு முன்னர் தங்களுக்கான இலவச உரத்தினை பெற்றுக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட விவசாயிகளிடம் மாவட்டச் செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு சீனா அரசாங்கத்தின் உதவியுடன் அரசினால் விவசாயிகளின் பெரும் போக நடவடிக்கைகளுக்காக இலவசமாக வழங்கப்பட்டுவரும் டீசலுக்கான காலம் முடிவடைந்த நிலையிலும் விவசாயிகளின் நன்மை கருதி அதுவும ஏப்ரல் 14 வரை நீடிக்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 196,000 லீற்றரில் 50% ஆன விவசாயிகள் மாத்திரமே குறித்த இலவச டீசலினை பெற்றுள்ளார்கள் எனவும் அதனையும் குறித்த கால எல்லைக்குள் விவசாயிகள் பெற்றுக்கொண்டு மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், மாவட்டத்தின் உணவு உற்பத்திக்கு பங்காற்றுவதுடன், அரசினால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்பு திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங் குமாறு மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளிடம் கேட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அரசினால் வழங்கப்படும் மானிய உரம் மற்றும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்படாதவண்ணம் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் ஓவியக் கண்காட்சி













(பழுவூரான்)

மட்டக்களப்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்டுவரும் பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளராகிய கமலா வாசுகியின் ஓவியங்களின் கண்காட்சி புதன்கிழமை மட்டக்களப்பு லேடி மனிங் ட்றைவிலுள்ள இல – 55 இல் தொடக்கி வைக்கப்பட்டது.

தொடக்க நிகழ்வில், பேராசிரியர் சி.ஜெய்சங்கர், ஓவியர் சு.நிர்மலவாசன், எழுத்தாளர் விஜயலெட்சுமி சேகர், விரிவுரையாளர் து.கௌரீஸ்வரன், கலாநிதி அ.விமல்ராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சி ஏப்ரல் 10 வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சிக் கூடத்தை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

கமலாவாசுகி 1966 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்து, அங்கேயே கல்வி கற்றவர். யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான இவர், 1989 பெப்ரவரி 2 யாழ். பல்கலைக்கழகத்தில் தனது முதலாவது ஓவியக் கண்காட்சியை நடத்தியதிலிருந்து இலங்கைத் தமிழ்ச் சூழலில் குறிப்பிடத்தக்க பெண்ணிலைவாத ஓவியக் கலைஞராகத் தன்னை வெளிக்காட்டியவராவார்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தனியாகவும் மற்றும் பல ஓவியர்களுடன் இணைந்தும் தனது ஓவியங்களைக் காட்சிப்படுத்தியுள்ள இவர். 1995 இலிருந்து இற்றை வரைக்கும் மட்டுநகரைத் தளமாகக் கொண்டு இயங்கி வருகின்றார். 1998 இல் மட்டுநகர் சாள்ஸ் மண்டபத்தில் தன்னுடைய ஓவியக் காட்சியை நடத்தியிருந்தார்.

பெண்ணிலைவாதச் சிந்தனைகளையும் அதற்குரிய வாழ்க்கை முறைகளையும் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினருடனும் பகிர்ந்தும், பரவலாக்கியும் கொள்வதற்கான ஊடகமாக கலை இலக்கியங்களைக் கையாண்டு வருகிறார்.

கடந்த மூன்று தசாப்தங்களாகத் தான் அனுபவித்த, எதிர்கொண்ட விடயங்களைப் பேசு பொருளாகக் கொண்டு தனது ஓவியங்களின் கண்காட்சியை நடத்துகிறார்.

இலங்கைத் தீவின் வரலாற்றில் 1989 தொடக்கம் 2023 வரையான காலகட்டம் என்பது கவனத்திற்குரிய சமூக அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்ட தீர்க்கமான காலமாக அமைந்துள்ளது.

இக்காலகட்டத்தில் ஒரு பெண்ணிலைவாதக் கலைச்செயற்பாட்டாளராகத் தீவிரமாக இயங்கிய கமலா வாசுகி, தனது படைப்புக்களூடாக இக்காலத்தின் வலிகளையும், ஆற்றுப்படுத்தல்களையும், நம்பிக்கைகளையும் பொதுவெளியில் பகிர்ந்து கொள்ள விளைகின்றார்.

கடந்த மூன்று தசாப்த காலத்து வரலாற்றில் ஆணாதிக்கச் சிந்தனைகளின் ஆதிக்கமும் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களும் எமது பண்பாடுகளை எவ்வாறு தீர்மானித்து வந்துள்ளன என்பது குறித்தும் இதுபற்றிய பெண்ணிலைவாதப் பார்வைகள், பெண்ணிலைவாதிகளின் எதிர்வினைகள் எவ்வாறு உள்ளன என்பதையும் விளங்கிக் கொள்ளவும், கற்றறிந்து கொள்வதற்கும் கமலா வாசுகியின் ஓவியங்கள் பெரிதும் துணைபுரிவதாக இருக்கின்றன.

ஆணாதிக்கச் சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டுள்ள பண்பாட்டு வெளிகளில் நிராகரிக்க முடியாத கேள்விகளுடன் பெண்ணிலைவாதச் சிந்தனைகள் உலகந்தழுவி முக்கியத்துவம் பெற்று வருகின்ற இக்காலகட்டத்தில், கமலா வாசுகியின் ஓவியங்களும் நிராகரிக்க முடியாத கலைப்படைப்புக்களாக முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றன. மேலும் இலங்கைத் தமிழ்ச் சூழலில் பொருளாதாரத் தடைகள் காரணமாக ஓவியங்களைப் படைப்பதற்கான ஊடகங்கள் கிடைக்காத போது எவ்வாறு ஓவியர்கள் செயற்பட்டார்கள் என்பதையும் எவ்வாறு தாக்கவன்மை கொண்ட ஓவியங்களைப் படைப்பாக்கஞ் செய்துள்ளார்கள் என்பதையும் விளங்கிக் கொள்வதற்கான வரலாற்று ஆதாரங்களைக் கமலா வாசுகியின் ஆக்கங்கள் காட்டி நிற்கின்றன. இவ்வாறு பலதளங்களில் கவனிப்புக்குரிய காட்சி வெளியாகக் கமலா வாசுகியின் 'கடந்து வந்த காலத்தைப் பார்த்தல்' எனும் தொனிப் பொருளில் இவ் ஓவியக் காட்சிநடைபெறுகிறது.

# உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய அறிக்கை இனங்களுக்கிடையில் பிரச்சினையை தூண்டும்

## அபாயம் என்கிறார் மரிக்கார்



உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை வர்த்தமானிப்படுத்த முன்னர் அதுதொடர்பில் மீளாய்வு செய்ய மீளாய்வு குழு அமைப்போம்.

அதற்காக அனைத்து கட்சிகளுக்கும் அழைப்புவிடுப்போம் என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் எழுப்பிய கேள்யொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மரிக்கார் எம்.பி. தனது கேள்வியில் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் அவர்களின் காலம் முடிவடைகிறது.

தற்போது அவர்கள் இதுதொடர்பாக இறுதி அறிக்கையைக் கையளிக்க இருக்கின்றனர். என்றாலும் அவர்களின் அறிக்கையைப் பார்வையிடுமாறு உத்தியோகபூர்வமற்ற முறையில் எமக்கு கிடைத்த அழைப்பின் பேரில் நானும் அதனைப் பார்வையிட்டேன்.

என்றாலும் இதன் மூலம் வரலாற்றுத் தவறு இடம்பெறுவது எமக்கு புலப்பட்டது. அதனால் இந்த அறிக்கை தொடர்பாக மீளாய்வுக் குழு அமைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில் குறித்த எல்லை நிர்ணய அறிக்கை இன,மதங்களுக்கிடையில் பிரச்சினை ஏற்படும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நூற்றுக்கு 50 வீதம் குறைக்குமாறு தெரிவிக்கப்பட்டதும், வட்டாரங்களில் இருந்து நூற்றுக்கு 50 வீதம் தேசியப்பட்டியலில் நூற்றுக்கு 50 வீதம் குறைக்கப்பட்டுள்ளது. பல்வேறு இனங்கள் வாழும் பிரதேசங்களில் இது சிக்கலானது.

அதனால் இதனை சட்டமூலமாக வர்த்தமானிப்படுத்த முன்னர் இதுதொடர்பில் அனைத்து கட்சிகளையும் அழைத்து மீளாய்வு குழுவில் ஆராய்ந்து தவறுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.

இதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார கூறுகையில் –

வழமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய குழுவின் ஊடாகவே எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஆனால் இப்போது அதிகாரிகள் குழுவொன்றே அதனைச் செய்துள்ளது. இதனால் மரிக்கார் எம்.பியின் கோரிக்கை போன்று அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கியமீளாய்வு குழுவொன்றை அமைக்குமாறு கேட்கின்றேன். – என்றார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் –

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் கோளாறு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதில் உண்மை இருக்கிறது.

அதனால் உள்ளூராட்சி மன்ற எல்லை நிரணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை வர்த்தமானிப்படுத்த முன்னர் அதுதொடர்பில் மீளாய்வு செய்ய மீளாய்வு குழு அமைப்போம். அதற்காக அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்போம். – என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கு அரசின் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவோம்

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்



சட்டத்தின் ஆதிக்கத்தை மீறி செயற்படும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்துவோம்.

அத்துடன் எதிர்க்கட்சியின் ஆலோசனைகளை மதிக்காமல் செயற்பட்டதாலே நாடு வங்குரோத்து நிலைக்கு செல்ல காரணமாகும் என எதிர்க்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

சர்வதேச நாணய நிதியம் முதலாம் கட்ட கடன் உதவியை வழங்கும்போது எமக்கு வழங்கிய நிபந்தனைகளில் பிரதானமானது சட்டத்தின் ஆதிபத்தியத்தை பாதுகாக்க வேண்டும் என்பதாகும். ஆனால் அரசாங்கம் சட்டத்துக்கு முரணாக தேர்தலை பிற்போட்டு இருக்கிறது.

தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அரசாங்கம் மீறி இருக்கிறது. நீதிபதிகளை, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை, ஊடகவியலாளர்களை நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து சட்டத்தின் ஆதிக்கத்தை மீறி இருக்கிறது.

அதேபோன்று அமைதிப் பேரணி மீது தாக்குதல் நடத்தி இரண்டு உயிர்களை பலி எடுத்திருக்கிறது. 2019 இல் இருந்து அரசாங்கம் இதனையே செய்து வருகிறது.

அத்துடன் எதிர்க்கட்சியின் ஆலோசனைகளைக் கேட்பதற்கு இந்த அரசாங்கம் தயார் இல்லை. 19 ஆம் திருத்தத்தின் நல்ல விடயங்களை நீக்க வேண்டாம் என நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்தோம்.

ஆனால் 20 ஆம் திருத்தத்தைக் கொண்டு முற்றாக அதனை இல்லாமலாக்கினார்கள். ஆனால் 21ஆம் திருத்தத்தை கொண்டுவந்து மீண்டும் 19 ஐயும் பலப்படுத்தும் வகையில் திருத்தம் மேற்கொண்டோம்.

அத்துடன் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கியவாக்குறுதியை மீறி செயற்பட்டு வருகின்றது, அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் அடுத்தமாதம் இலங்கை வர இருக்கின்றனர்.

இதன்போது அரசாங்கம் தேர்தலை பிற்போட்டிருப்பது, நீதிபதிகளை நெருக்கடிக்கு ஆளாக்கி இருப்பது. தேர்தல் ஆணைக்குழு மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கி வரும் அழுத்தங்கள் தொடர்பில் தெரிவிப்போம்.

மேலும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருக்கிறது. ஆனால், அவர்களுடன் எந்த கலந்துரையாடலையும் அரசாங்கம் மேற்கொள்வதில்லை.

சாதாரண மக்களின் அழுத்தங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என சர்வதேச அமைப்புகள் அனைத்தும் தெரிவித்திருக்கின்றன. தேர்தலை நடத்துமாறு மல்வத்து, அஸ்கிரிய பீடங்கள் மற்றும் கர்தினாலும் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் அரசாங்கம் எந்த பதிலையும் வழங்காமல் இருக்கிறது. எனவே தேர்தலுக்கு சென்று மக்கள் ஆணை எதுவாக இருந்தாலும் அதற்கு தலை சாய்த்து செயற்பட அனைவரும் ஒன்றுபட வேண்டும். – என்றார்.

# நிதியமைச்சின் செயலாளரின் செயற்பாட்டால் நாடாளுமன்ற அதிகாரம் சவாலுக்குள்ளானது

## மத்தும பண்டார சாடல்



நிதியமைச்சின் செயலரின் தன்னிச்சையானசெயற்பாட்டால்நாடாளுமன்றத்தின் அதிகாரம்சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதால், எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

ஆகவே அவருக்கு எதிராக சிறப்புரிமை மீறல் முறைப்பாட்டை முன்வைப்பதாக குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார சிறப்புரிமை மீறல் முறைப்பாட்டை சபையில் முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் தொடர்பான முறைப்பாட்டை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நிதி சட்டத்தின் 108 ஆவது உறுப்புரையின் பிரகாரம் நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது.

அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இதுவரை நடத்தப்படவில்லை. நிதி நெருக்கடி காரணமாக தேர்தல் இன்றும் இழுபறி நிலையில் உள்ளது.

நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரியின் செயலாளர் விடுவிக்காமல் தன்னிச்சையான முறையில் செயற்படுகிறார்.

திறைசேரி செயலாளரின் செயற்பாடுகளால் நாடாளுமன்றத்தின் அதிகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதால் எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

ஆகவே திறைசேரியின் செயலாளருக்கு எதிராக நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் முறைப்பாட்டை முன்வைக்கிறேன். – என்றார்.

முன்வைக்கப்பட்ட சிறப்புரிமை மீறல் முறைப்பாடு நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை தொடர்பான குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

# கிளிநொச்சியில் 98 ஏக்கர் காணியை தனியாருக்கு வழங்க நில அளவீடு

## பொதுமக்கள் எதிர்ப்பையடுத்து பணிகள் நிறுத்தம்





கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனை பகுதியில் 98 ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் நோக்கில் நில அளவீடு மேற்கொள்வதற்கு பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை கிராம அலுவலர் பிரிவில் இறால் வளர்ப்பு திட்டத்துக்கு 98 ஏக்கர் காணியைத் தனியார் ஒருவருக்கு வழங்கும் நோக்கில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நில அளவீடு செய்ய முற்பட்டபோது நில அளவீட்டுப் பணிகள் பொது மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளின்மை, 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்த காணிகள் இன்றி வாழுதல் என பல்வேறு காணித் தேவைகள் உள்ள போதும் இருக்கின்ற போதும் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகள் உள்ளடங்களாக 98 ஏக்கர் காணியை தனியாருக்கு வழங்கும் நோக்கில் நில அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் அளவீட்டுப்பணிகள் தடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு காணித்தேவைகள் உள்ள நிலையில் தமது பகுதியில் உள்ள காணிகளை வழங்க முடியாது என்றும் எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை நில அளவீட்டை மேற்கொள்வதற்காக நில அளவீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், நில அளவீடு செய்வதற்கு சென்றபோது பொதுமக்களால் குறித்த நில அளவீட்டுப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடியுடன் இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அனைவரும் ஒன்றிணைவது அவசியம்

**மக்களின் ஆதரவை இழந்த ஓர் ஆட்சி, இன்னும் சொல்லப்போனால் மக்கள் தமது ஆதரவைத் திரும்பப் பெற்ற ஓர் ஆட்சி தனது அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்வதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருகிறது.**

**ஏற்கனவே இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமே மனித உரிமைகளுக்கு மாறானது என்று ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, அமெரிக்கா, பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள் என்பன ஏற்கனவே தெரிவித்த நிலையில் அதைவிட மோசமானதொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்கள்முன்வந்திருப்பதுகண்டனத்துக்குரியது.**

**இன்று ஆளும் தரப்பைத் தவிர்த்து மற்றைய எல்லாத் தரப்புகளும் இந்தப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்க்கின்றன. எதிர்ப்பின் வீரியம் எந்தளவிற்கென்றால், ஆளும் தரப்பின் முதன்மைத் தரப்பான பொது ஜன பெரமுனவே, இந்தச் சட்டம் மக்களுக்குப் பாதிப்பானதாக அமையுமாயின் அதனை எதிர்ப்போம் என்று சொல்லுமளவிற்கு இந்தத் தடவை கடுமையான எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.**

**சிங்களக் கட்சிகள் அனைத்துமே அதனை எதிர்க்கின்றன. தமக்கு இந்தச் சட்டம் வேண்டாம் என்கின்றன. இருப்பினும் நாடாளுமன்றத்தில் ஆட்சித் தரப்புக்கே பெரும்பான்மை இருப்பதால் இந்தச் சட்டம் அங்கு நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. குறைந்தபட்சம் இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் தொடர்வதற்கும், அதன் பின்னர் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கும் ஆட்சியாளர்களுக்கு இந்தச் சட்டம் அவசியமாக இருக்கக்கூடும். எனவே இந்தச் சட்டத்தை ஆட்சியாளர்கள் முழுமையாகத் திரும்பப் பெறும் வரையில் அனைத்துத் தரப்புக்களும் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும்.**


**அது சட்ட ரீதியானதாகவும் அரசியல் ரீதியானனதாகவும் போராட்ட ரீதியானதாகவும் ஒருங்கிணைக்கப்படவேண்டும். ஏற்கனவே தேர்தல் தொடர்பான எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் அடக்கி உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்தும் தன்னிச்சையாக ஒத்தி வைத்துள்ள அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்திலும் அதே அணுகுமுறையைப் பின்பற்றமாட்டார் என்று சொல்ல முடியாது.**

**தொடர்ந்தும் அடக்குமுறையை ஏவிவிடுவதன் மூலம் தனது ஆட்சியைப் பாதுகாப்பதில் அவர் கவனம் கொண்டிருப்பது இயல்பானது. உலகம் முழுவதும் சிறுபான்மை ஆதரவைக் கொண்ட ஆட்சிகள் எல்லாமே தமது ஆட்சியைத் தக்கவைக்க எதிர்த் தரப்பு மீதும் மக்கள் மீதும் ஆடக்குமுறையை ஏவுவதை ஒரு உத்தியாகவே கையாண்டு வந்திருக்கின்றன. ரணில் சிறுபான்மை ஆட்சியைக்கூட அல்ல விளிம்புநிலை ஆட்சியை, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஆட்சியை வைத்திருப்பவர். அவர் இன்னும் வீரியமாக அரச அடக்குமுறையைக் கையிலொடுப்பார் என்று எதிர்பார்க்கலாம்.**

**அதனை எதிர்ப்பதற்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளப் பெற வைப்பதற்கும் ஒருன்றிணைந்த எதிர்ப்புச் சக்தி அவசியமானது. அனைத்து வேறுபாடுகளையும் கடந்த ஒன்றிணைப்பு இந்த விடயத்தில் அவசியம். மக்களின் எதிர்காலத்தைக் கருதியில்லாவிட்டாலும் தமதும் தமது கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் அமைப்புக்களினதும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டாவது அனைத்துத் தரப்பினரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக ஒன்றிணைவது அவசியம்.**

# இடைக்கால ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்குச்சீட்டுக்கள் அழிக்கப்பட்டுள்ளன

## சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தகவல்



முன்னாள் ஜனாதிபதி கோட்டபயராஜபக்ஷபதவிவிலகியதை தொடர்ந்து நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்கான இரகசியவாக்கெடுப்பின்போது அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் சட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றசெயலாளர்நாயகத்தால் அழிக்கப்பட்டுள்ளன என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) விசேட அறிவிப்புக்களை அறிவிக்கும்போது மேற்கண்டவாறு குறப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரசமைப்பின் 40ஆவது உறுப்புரையின் அத்தியாயம், நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 7 பிரிவின் விதிவிதானங்கள் மற்றும் நாடாளுமன்றத்தின்ஊடாக இடைக்கால ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் 1981ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு விசேட விதிவிதானங்களை பின்பற்றி 2022.07.20 ஆம் திகதி நாடாளுமன்றத் தில் இடம்பெற்ற இரக சிய வாக்கெடுப்புக்கான அளிக் கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் ஜனாதிபதி தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 18 ஆவது உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2023.03.24 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அலுல்கள் தொடர்பான குழு தெரிவு குழுவின் அனுமதிக்கு அமைய நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் அழிக்கப்பட்டன. – என்றார்.

2022, ஜுலை 09 ஆம் திகதி இடம்பெற்ற மாபெரும் மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது பதவி விலகல் கடிதத்தை வெளிநாட்டில் இருந்தவாறு ஜுலை மாதம் 14 ஆம் திகதி சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அதனை தொடர்ந்து 1981 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்கத்தின் சிறப்பு ஏற்பாடுகளுக்கு அமைய நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்யும் பணிகளை நாடாளுமன்றசெயலாளர்நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராக இருந்து முன்னெடுத்தார்.

இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்கு ஆளும் தரப்பின் வேட்பாளராக பதில் ஜனாதிபதியாக பதவி வகித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக டலஸ் அழகபெரும மற்றும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வேட்பு மனுத்தாக்கல் செய்தார்கள்.

இடைக்கால ஜனாதிபதி தெரிவு சிறப்பு சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் இரகசிய வாக்கெடுப்பு 2022.07.20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது 223 வாக்குகள் அளிக்கப்பட்டன அவற்றில் 219 வாக்குகள் செல்லுபடியானவை, 4 வாக்கு கள் செல்லுபடியற் றவை என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்தார்.

இரகசியவாக்கெடுப்பில் ஆளும் தரப்பின் வேட்பாளரான பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளையும், எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் டலஸ் அழகபெரும 82 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் 3 வாக்குகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நாட்டின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாறான பின்னணியில் அளிக்கப்பட்ட இரகசிய வாக்குச்சீட்டுக்கள் இடைக்கால ஜனாதிபதி தெரிவு சிறப்பு சட்டத்தின் 18 ஆவது உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் அழிக்கப்பட்டது.

# பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ரணில் களமிறக்கப்படுவாரென்ற எதிர்பார்ப்பு தவறல்ல

## பந்துல கூறுகின்றார்



ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்குவது தொடர்பில் உத்தியோகபூர்வமாகத் தீர்மானிக்கப்படவில்லை.

எனினும் நாட்டின் நன்மையைக் கருத்திற் கொண்டு அவ்வாறானதொரு எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல் தவறல்ல என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வதாக வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்குவது தொடர்பில் கட்சி ரீதியில் உத்தியோகபூர்வமான யோசனைகள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

ஆனால் பொதுஜன பெரமுனவும், நாட்டை நேசிக்கும் ஏனைய அனைத்து தரப்பினரும் நாட்டைக்கட்டியெழுப்புவதற்கே முக்கியத்துவமளித்துள்ளனர்.

அதனை நேர்மையாகவும், சரியாகவும் செய்யக் கூடிய பலம் மிக்க தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல நாடாளுமன்ற உறுப்பினர்களதும் நன் மதிப்பைப் பெற்றுள்ளார். எமது நாடு காணப்பட்ட இடத்திலிருந்து சிறந்தவொரு இடத்துக்கு இன்று கொண்டு வரப்பட்டுள் ளது. அதற்கான நடவடிக்கை கள் சாதகமான முறையில் இடம்பெற்றுள்ளன.

கேள்வி: அவ்வாறெனில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்படுவார் என்று எதிர்பார்க்க முடியுமா?

பதில்: நாட்டுக்கு நன்மை ஏற்படும் எனில், சிறந்த எதிர்ப்பார்ப்பைக் கொண்டிருத்தல் தவறல்ல என்பதே எனது நிலைப்பாடாகும். – என்றார்.

# மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்து நிவாரணங்களை வழங்க திட்டம் இருந்தால் ஆதரவு

## வடிவேல் சுரேஷ் அரசுக்குப் பகிரங்க அறிவிப்பு



மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கு முறையான சட்டத்தை ஏற்படுத்த வேண்டும். மலையக மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி நல்ல திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்குமாக இருந்தால் எமது பூரண ஆதரவை அரசாங்கத்துக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பண்டாரவளை பூனாகலை - கபரகல மண்சரிவு ஏற்பட்டு ஒரு மாதமாகிறது. கபரகல மற்றும் மக்கள் தெனியவில் 142 குடும்பங்கள் மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களில் 70 குடும்பங்கள் மாகந்தர தொழிற்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித வசதிகளும் இல்லாத அந்த தொழிற்சாலை உடைந்து விழும் நிலையில் இருக்கின்றது. சிறிய குழந்தைகளும் அந்த முகாமில் இருக்கின்றன.

இந்த மக்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்னெடுத்த நடவடிக்கை என்ன? எப்போது அவர்களுக்கு வீடுகள் வழங்கப் போகிறது என்று கேட்கின்றேன்.

இதேவேளை, சூறாவளியால் பசறை, மடுல்சீமை பகுதியில் பலர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது அரிசி நிவாரணம் வழங்கப்படுகிறது. இதனைப் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று எட்டியாந்தோட்டை நாகசேனை தோட்டத்தில் சுதந்திரமாக வாழவிடுமாறு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவர்களின் சமூக பாதுகாப்பை அவர்கள் கோருகின்றனர்.

யாருக்காவது முடியுமாக இருந்தால் அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். வெளியார் வந்து அங்கு காணிகளை அபகரிக்க முடியாது. அத்துடன் மலையக மக் களின் சம்பள பிரச்சினை தொடர்பில் தொடர்ச்சியாக பேசி வருகின்றேன். கூட்டு ஒப்பந்தம் ஊடாகவோ, சம்பள நிர்ணய சபையின் ஊடாகவோ சம்பளத்தை அதிகரிக்க வேண்டும். தற்போதைய வாழ்க்கைச்செலவுக்கு முகம்கொடுக்கும் வகையில் அனைவரும் ஒற்றுமையாக இருந்து 3250 ரூபா சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியையும் வலியுறுத்தியுள்ளேன்.

அத்துடன் மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்போம் என்று கூறினால் போதாது. அது தொடர்பில் சட்டத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். எனவே, அரசாங்கம் நல்ல திட்டங்களைச்செயற்படுத்தி, பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்து மலையக மக்களை உள்வாங்கி அவர்களுக்கும் நிவாரணங்களைவழங்கினால், மலையக மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கின்றோம். - என்றார்.

# ஒழுக்கவியல், சிறப்புரிமைகள் குழுவிற்கு சட்டக் கல்லூரி அதிபரை அழையுங்கள்

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை

சட்டக்கல்லூரி மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி உரிமை தொடர்பில் நாடாளுமன்றம் எடுத்த தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

நாடாளுமன்றதின் தீர்மானங்களைப் புறக்கணித்து ஒருதரப்பினர் சட்டவாக்கத் துறைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது, ஆகவே, சட்டக் கல்லூரியின் அதிபரை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவிற்கு அழையுங்கள் என எதிர்க்கட்சி உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, ஜயந்த சமவீர ஆகியோர் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்கள்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதை கட்டாயமாக்கும் வகையில் கடந்த 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி தோற்கடிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் நிதியமைச்சுக்கு நாடாளுமன்ற அதிகாரிகளால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நீதியமைச்சின் செயலாளர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. சட்ட ஆய்வு கவுன்சில் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை.

சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு தற்போது புத்தாண்டு கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது, எதிர்வரும் 24 ஆம் திகதி சட்டக் கல்லூரி பரீட்சை இடம்பெறவுள்ளது.

ஆகவே, நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தமது தாய்மொழியில் பரீட்சைக்கு தோற்றும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தின் தீர்மானத்தைப் புறக்கணித்து ஒரு தரப்பினர் சட்டவாக்கத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகிறார்கள், ஆகவே, இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றம் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும், இல்லாவிடின் சமூக கட்டமைப்பில் மீண்டும் அமைதியற்ற தன்மை நிலவும். – என்றார்.

இதன்போது எழுந்து ஒழுங்கு பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்தாமல் செயற்படுவது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறலாகக் கருதப்படும். ஆகவே சட்டக்கல்லூரி அதிபரை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவிற்கு உடன் அழையுங்கள் என சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஜயந்த சமரவீர, நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை பொறுப்பான தரப்பினர் செயற்படுத்தாமல் இருக்கின்றமை நாடாளுமன்றத்தை அவமதிப்பதாகக் கருதப்படும். ஆகவே பொறுப்பான தரப்பினரை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவிற்கு அழையுங்கள். – என்றார்.

# குடாக்கடல் நீரேரி பகுதியிலுள்ள கடலட்டை பண்ணைகள் உடன் அகற்றப்படல்வேண்டும்!

## அருட்தந்தை யூஜின் வலியுறுத்து

குடாக்கடல் நீரேரிப் பகுதியிலுள்ள கடல்அட்டைப்பண்ணைகள்அகற்றப்படவேண்டும் இந்தக் கடல் அட்டைப் பண்ணைகளால் கடல் வளங்கள் சூறையாடப்படுவதுடன் கடல் வாழ் உயிரினங்கள் அழிவடையும்நிலைஏற்பட்டுள்ளது.

எனவே உரிய திணைக்களங்கள் இது தொடர்பில் அக்கறை எடுத்து இதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை யூஜின் பிரான்ஸிஸ் அடிகளார் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தொடர்பான திணைக்கள அதிகாரிகளுக்கும் கிராம குழுக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; -

சுற்றுச்சூழல தொடர்பில் தற்போது அதிகளவாகக் கதைத்து வருகின்றோம். ஆனால்எம் கண்முன்னே குறிப்பாக குடாக்கடல்நீரேரிப்பகுதியில் கடல் அட்டைப் பண்ணைகள் ஒழுங்கற்ற முறையில் அமைக்கப்பட்டு கடலின் வளங்கள் வெளிநாட்டினரால் சூறையாடப்படுகின்றது. அது மட்டுமன்றி கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. பருவ காலத்தில் இந்தக் கடற்கரையைத் தேடிவருகின்ற மீனினங்கள் உற்பத்திக்காக இப்பகுதிகளுக்கு வராத நிலை காணப்படுகின்றது. இந்த நிலை தொடருமாயின் குடாக்கடலை நம்பிவாழும்தொழிலாளர்கள் தமதுதொழிலைமுற்றுமுழுதாகஇழக்க நேரிடும். கடல் அட்டைப் பண்ணைகளால் இலாபம் வரும் என்பதற்காக குடாக்கடலைநம்பியுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு யார் உதவி செய்வது? கடல் அட்டையை இலங்கையில் எவருமே பயன்படுத்துவதில்லை.

அவ்வாறுள்ள நிலையில்வெளிநாட்டின் இலாபத்துக்காக இந்தத் தொழில் முறையைச் செய்துஇலாபம்ஈட்டுவது யார்? இலாபத்தை ஈட்டுவதாயின்அதற்கான தொழிலாளர்கள் பங்கு பற்றுதல் முக்கியமானது. எனவே, பழக்கம்இல்லாத சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற தொழில் முறையைத் தவிர்த்து சூழலுக்கு ஏற்ற தொழில் முறையைச் செய்வதற்கு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் மற்றும்கரையோரம்பேணல் மூலவளத்திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் திணைக்களங்கள்இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். - என்றார்.

# விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆசிரியர், பேராசிரியர்கள் இணக்கமாம்

## கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்



கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளை விரைவாக முடித்துக்கொண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீன எதிர்தரப்பு உறுப்பினர் ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்வி பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப் பிட்டவை வருமாறு – விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையா ளர் இணக்கப்பாடு தெரிவித்துள்ளார்கள். பெற்றோல் விநியோகத்துக்கு இராணுவத்தினரை இணைத்துக் கொள்வதை போன்று விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு பிற தரப்பினரை இணைத்துக் கொள்ள வேண்டும், ஆகவே பேச்சு ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

ஆசிரியர் சங்கத்துடன் பேச்சு நடத்தப்பட்டு அதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக பேராசிரியர் கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு அவர்களுக்கு உச்ச அளவு கொடுப்பனவை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் இரண்டொரு தினங்களில் அவர்கள் அதற்கான முடிவை தொழிற்சங்கத்தினர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்கள். பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற் றும் பேராசிரியர்களுக்கு இம்முறை அதிகரித்த கொடுப்பனவுகளை வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து மேலதிகமாக 42 கோடியே 50 லட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் வரி அதிகரிப்பு தொடர்பில் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் கல்வி அமைச்சுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அது நிதியமைச்சோடு சம்பந்தப்பட்டது. அவர்கள் அதற்கான வேண்டுகோளை நிதியமைச்சிடம் முன்வைத்து தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளுக்கு அவர்களில் 80 வீதமானவர்கள் இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்தது, இன்னும் இரண்டொரு தினங்களில் அவர்கள் அது தொடர்பான முடிவை அறிவிப்பார்கள். அந்த வகையில் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு விரைவாக க.பொ.த சாதாரண தர பரீட் சையை நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# மததலைவர்களுக்கு அமைச்சு பாதுகாப்பு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது?

## ஹக்கீம், மஹ்ரூப் சபையில் கேள்வி

திருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்துக்கு சென்ற மதத்தலைவர்களுக்கு அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டனர் என ரவூப் ஹக்கீம், இம்ரான் மஹ்ரூப் சபையில் கேட்ட கேள்விக்கு சபையில் முறையான பதில் வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் இடையிட்டு கேள்வியொன்றை முன்வைத்து குறிப்பிடுகையில் –

திருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் பௌத்த பிக்கு ஒருவரால் பௌத்த சிலை வைக்க முற்பட்டபோது ஏற்பட்ட சம்பவம் தற்போது சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது.

குறித்த மதகுருவுக்கு அமைச்சு பாதுகாப்பு அதிகாரி வழங்கப்பட்டிருப்பதும் அவர்கள் அங்கு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பொது மக்களுக்கு துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தும் நிலைமை சிலைவைப்பதை தடுத்த மக்களின் நிலைமையும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

அதேபோன்று தொல்பொருள் நடவடிக்கையின் போது எமது பிரதேசத்தில் காலாகாலமாக வாழ்ந்துவந்தவர்களின் வீடுகள், அவர்களின் விவசாய பூமிகள் அபகரிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன? இதற்கு பௌத்த விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பதிலளிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதுதொடர்பாக தேடிப்பார்த்து உங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் தொல்பொருள் நடவடிக்கையின் போது ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பில் தகவல் வழங்கினால் நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறுக்கிட்டு, ருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்துக்கு சில மதத்தலைவர்கள் அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுடன் சென்றிருக்கின்றனர்.

இதன்போது அந்த பிரதேசத்தில் எதிர்ப்பு தெரிவித்த மக்களை நோக்கி துப்பாகி நீட்டி அச்சுறுத்தி இருக்கின்றனர். அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் மதத்தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அந்த இடத்துக்கு சென்றார்கள் என்பது தொடர்பில் நீங்கள் தேடிப்பார்ப்பீர்களா? எமக்கு அறிக்கை சமர்ப்பிப்பீர்களா ? என கேட்டார். அதற்கு அமைச்சர் அமைச்சு பாதுகாப்பு பிரிவு பௌத்த கலாசார அமைச்சுக்கு உட்பட்டது அல்ல. அந்த கேள்வியை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் முன்வையுங்கள். – என்றார்.

# ஊடகவியலாளர்களை முடக்கும் கொள்கைகளை அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றவே மாட்டாதாம்

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் பந்துல

ஊடகவியலாளர்களை முடக்கும் கொள்கைகளை அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றாது. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், ஆர்ப்பாட்டங்களின் மீது ஊடகவியலாளர்களும் தாக்குதலுக்கு உள்ளாகின்றமை தொடர்பில் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் –

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தால் ஊடகவியலாளர் அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அடையாள அட்டை தொடர்பில் பாதுகாப்பு பிரிவினரால் போதுமான அவதானம் செலுத்தப்படும்.

எனினும் ஏதேனுமொரு ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் அல்லது வேறு அழுத்தங்கள் காணப்பட்டால் அது தொடர்பாக எமக்கு தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாறாக ஊடகங்களை ஒடுக்கும் கொள்கையை அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றவில்லை. ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது முக்கியத்துவமுடையது என்பதே எமது கொள்கையாகும். – என்றார்.





சாவகச்சேரி பாரதி பாலர் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன் கண்காட்சி செவ்வாய்க்கிழமை முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

கண்காட்சி நிகழ்வில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ரஜனிகாந்தன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆக்கத்திறன் கண்காட்சி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இதன்போது முன்பள்ளிச் சிறார்களின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்ட காட்சிப் பொருட்கள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2023 இல் வெளியிடப்பெற்றது.